அருந்துங்கள்!
அண்ணா கோப்பி
பாவித்த வெற்றுப்
பைகளைக் கொடுத்து
இனாம்
பெற்றுக்கொள்ளுங்கள்.
அண்ணா
தொழிலகம்
இணுவில்
(சி-9106)

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

சத்துணவு
'ஜீவாகாரம்'
பக்கட் விலை 50/-
நான்கு மாதக்
குழந்தைகளிலிருந்து
கொடுக்கக் கூடியது
அண்ணா
தொழிலகம்
இணுவில்
(சி-9106

சுடர்10 திருவள்ளுவர் ஆண்டு 2026 வைகாசி 14 ஞாயிற்றுக்கிழமை (28 - 05 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 182

# வில்பத்து காட்டுப் பகுதியில் இருந்த
# 52 இராணுவ காவலரண்கள் வாபஸ்

## புலிகள் தாக்கலாம் என அச்சம்

யாழ்ப்பாணம், மே 28

மன்னார் மாவட்டத்தின் எல்லைப் பகுதியில் வில்பத்து காட்டுப் புறத்தில் அமைக்கப்பட்டிருந்த 52 காவலரண்கள் இராணுவத்தினரால் வாபஸ் பெறப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தக்கூடும் என்ற அச்சத்தின் காரணமாகவே காவலரண்களை கைவிட்டு படையினர் பின் வாங்கிச் சென்றுள்ளனர்.

வில்பத்து காட்டுப் பகுதியில் ஹாலங்கமுவ, ஜயசவன், படகம்ம, பழுகஸ்வெவ, மகா விலாச்சியா ஆகிய இடங்களில் இருந்த காவலரண்களே படையினரால் வாபஸ் பெறப்பட்டுள்ளன.

அந்தக் காவலரண்கள் ஒவ்வொன்றிலும் தினமும் 10 முதல் 15 வரையிலான இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு வந்தனர்.

காவலரண்கள் வாபஸ் பெறப்பட்டதை அடுத்து அப்பகுதிகளில் குடியேறி வசித்த சிங்கள குடும்பங்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறிச் சென்றுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை—

விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சத்தினால் திருமலை, மட்டக்களப்பு, மணலாறு பகுதிகளில் குடியேற்றப்பட்ட சிங்களக் குடும்பங்கள் பாதுகாப்பான பகுதிகளுக்கு இடம் பெயரத் தொடங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றினர்

கடந்த புதனன்று மட்டக்களப்பில் டஸ்லில் வந்த விசேட அதிரடிப் படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இராணுவ தளபாடங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றியிருந்தனர்.

இத் தாக்குதலின் போது
★ கோல் கொமாண்டோ — 1

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தாக்குதலில் ராணுவ அதிகாரி பலி

### அரபாத் நகரில் சம்பவம்

கொழும்பு, மே 28

புல்மோட்டைக்கு அருகில் அரபாத் நகர் என்ற கிராமத்தில் இராணுவத்தினர் மீது புலிகள் நேற்று நடத்திய தாக்குதலில் இராணுவ அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

நேற்றுக் கொல்லப்பட்ட இராணுவ அதிகாரியையும் சேர்த்து பாதுகாப்பு படையினரின் தரப்பில் போர்இடை நிறுத்தம் விலக்கிக் கொள்ளப்பட்ட ஏப்ரல் 19 இல் இருந்து நேற்று வரை இறந்தவர்களின் எண்ணிக்கை 278 என்று கணக்கிடப்பட்டுள்ளது.

## அரசுக்கும் புலிகளுக்கும் இடையே சமரச முயற்சியில் ஈடுபட கனடா அதிகாரி வருகிறார்

கொழும்பு, மே28

இலங்கையில் மீண்டும் வெடித்துள்ள மோதலை நிறுத்த அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மத்தியஸ்தம் வகிக்க கனடா அரசு விருப்பம் தெரிவித்துள்ளது.

கனடா வெளியுறவு அமைச்சின் ஆசிய - பசுபிக் பிராந்திய செயலாளர் றேமன் சான்ட்ஸ் எதிர்வரும் 31 ஆம் திகதி முதல் ஜூன் 2 ஆம் திகதி வரை இலங்கையில் விஜயம் செய்யவுள்ளார்.

அவர் கொழும்பில் தங்கியிருக்கும் போது விடுதலைப் புலி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்புத்துறையின் அசிரத்தையே தேரின் கொலைக்குக் காரணம்

கொழும்பு, மே 28

தமக்குப் பாதுகாப்பு வழங்குமாறு காலஞ்சென்ற சிலாலங்கார தேரர் அரசிடம் கோரி வந்தார். பாதுகாப்புத் துறையின் அசிரத்தையே அவரின் படுகொலைக்கு காரணமாகிவிட்டது.

பொலன்னறுவை திம்புலகலா விகாரையைச் சேர்ந்த வண. சந்திராலங்கார தேரர் முன்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

திம்புலகலா விகாரையின் பிரதம குரு சிலாலங்கார தேரரின் கொலை தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

திம்புலகலா விகாரையில் இராணுவ முகாம் ஒன்று இருந்தது. அந்த முகாம் கடந்த பெப்ரவரி 4 ஆம் திகதி அங்கிருந்து அகற்றப்பட்டது. தம்மைக் கொலை செய்வதற்காகவே இராணுவ முகாம் அகற்றப்பட்டிருக்கிறது என்று காலஞ் சென்ற தேரர் கூறிவந்தார்.

தமக்கு பாதுகாப்பு வழங்குமாறு அவர் விடுத்த கோரிக்கைகள் உரியபடி கவனிக்கப்படவில்லை.

[ 6ஆம் பக்கம் பார்க்க]

### தேரரின் சடலம்

கொழும்பு, மே 28

நேற்று முன்தினம் கொல்லப்பட்ட சிலாலங்கார நாயக்க தேரரின் உடல் திம்புலகலா விகாரையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

இறுதிக் கிரியைகள் எதிர்வரும ஜூன் 4 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ 6-4)

## தீர்வை முன்வைக்குமாறு வெளிநாடுகள் கோரிக்கை

### ராணுவ உதவி வழங்க நிபந்தனை

கொழும்பு, மே 28

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் உதவும்படி இலங்கை அரசு விடுத்த வேண்டுகோளுக்கு பெரும்பாலான வெளிநாடுகள் செவிசாய்க்கவில்லை என்றும் இலங்கை அரசு, தமிழ்மக்கள் ஏற்கக்கூடிய அரசியல் தீர்வொன்றை முதலில் முன்வைக்கவேண்டும் என்று அந்த நாடுகள் நிபந்தனை விதித்துள்ளன என்றும் 'புதிய' சிங்களப் பத்திரிகை செய்தி

[ 6ஆம் பக்கம் பார்க்க]

## புல்மோட்டைக்கு மேலதிக பொலீஸார்

கொழும்பு, மே 28

புல்மோட்டையின் கல்லராவ கிராமத்தில் 42 பொதுமக்கள் நேற்று முன்தினம் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து படையினர் இப்பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

மேலும் 400 பொலீஸார் இப்பகுதிகளில் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் இச்செயலுக்கு காரணமானவர்களை இழக்குப் பகுதியில் உள்ள காடுகளில் தேடும் பணியில் படையினர் மும்முரமாக ஈடுபட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

## தென்னிந்தியாவில் இருந்து கொழும்பு வரும்
# சிறிய கப்பல்களை பயன்படுத்தி துறைமுகத்தை தாக்கத் திட்டம்

### அமைச்சு அதிகாரி ஒருவர் தகவல்

கொழும்பு, மே 28

தென்னிந்தியாவில் உள்ள தூத்துக்குடி மற்றும் சிறிய துறைமுகங்களில் இருந்து சரக்குகளை ஏற்றிக்கொண்டு வரும் சிறிய கப்பல்களை [மரக்கலங்கள்] பயன்படுத்தி கொழும்பு துறைமுகத்தில் உள்ள கடற்படைத் தளத்தை தாக்குவதற்கு விடுதலைப் புலிகள் திட்டியிருந்த திட்டத்தை அரசு கண்டுபிடித்துள்ளதாம்.

துறைமுகங்கள் கப்பல் போக்குவரத்து அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் தற்கொலைப்படை உறுப்பினர்கள் பலரை தேசிய உளவறியும் பிரிவினர் துருவித் துருவி விசாரணை செய்ததன் விளைவாக இத்தகவல்கள் பெறப்பட்டதாக அந்த அதிகாரி தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் திட்டத்தின்படி —

தென்னிந்தியாவில் உள்ள சிறிய துறைமுகங்களில் இருந்து சரக்குகளை ஏற்றிக்கொண்டுவரும் சிறிய கப்பல்களை கடலில் இடைவழியில் வைத்து புலிகள் கைப்பற்றுவர்.

பின்னர் அவற்றில் சக்திவாய்ந்த வெடிமருந்துகளையும் ஆயுதங்களையும் ஏற்றிக்கொண்டு கப்பல்களை நேராக கடற்படைத் தளத்துக்கு ஓட்டி வந்து தாக்குதல் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது — என்றும் —

கொழும்பு துறைமுகத்தில் சிறிய கப்பல்கள் (மரக்கலங்கள்) தரிக்கும் துறைப்பகுதி கடற்படைத் தளத்தில் இருந்து நூறு மீற்றருக்கு அப்பால் உள்ளது — என்றும் அரச சார்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டது [ஐ]

## தீய சக்திகளின் முயற்சி குறித்து சந்திரிகா

கொழும்பு, மே 28

பொலன்னறுவை சம்மன்கடவ பிரதேச பிரதம சங்கநாயக்கர் கொல்லப்பட்ட சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தம்முடைய நோக்கங்களை அடைய சில தீய சக்திகள் முயற்சி செய்து வருகின்றன

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று வெளியிட்டுள்ள அனுதாபச்செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

இந்த துயரமான வேளையில் மக்கள் அமைதியான முறையில் நடந்துகொள்ள வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதற்கிடையில் கொல்லப்பட்ட தேரருக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு வாபஸ் பெறப்பட்டது என்று வெளியாகியுள்ள செய்திகளுக்கு பொலீஸ்மா அதிபர் மறுப்புத் தெரிவித்துள்ளார்

அவருக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு வாபஸ் பெறப்படவில்லை என்று பொலீஸ்மா அதிபர் திட்டவட்டமாக வலியுறுத்தியுள்ளார். (இ-4)

## திருமலையில் 4 தமிழர்கள் கொலை

யாழ்ப்பாணம், மே 28

திருகோணமலையில் அரசு சார்பான காடையர் குழு ஒன்றினால் 4 தமிழர்கள் வெட்டியும், அடித்தும் கொல்லப்பட்டுள்ளனர்.

திருகோணமலை பாலையூரில் செயற்படும் கதிர் என்பவர் தலைமையிலான காடையர் குழு ஒன்று அப்பகுதியில் ஐந்து தமிழர்களை கைது செய்ததாகவும் — அதில் 4 தமிழர்கள் கொல்லப்பட்டதாகவும் —

மற்றவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டது. [இ-3]

## பொலீஸ் – இராணுவம் வவுனியாவில் மோதல்

கொழும்பு, மே 28

வவுனியா குடாக்கச்சை கொடி எல்லைக் கிராமத்தில் பாதுகாப்பு பொலீஸ் நிலையத்தில் கடமையில் இருந்த பொலீஸார் சிலர் அங்கு வந்த இராணுவத்தினரால் தாக்கப்பட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை இரவு இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வவுனியா — ஹொரவப் பொத்தானை வீதியில் இப் பொலீஸ் நிலையம் அமைந்துள்ளது.

பழைய பகைமை காரணமாக இராணுவத்தினர் பொலீஸார் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது இச் சம்பவத்தில் மூன்று பொலீஸார் காயமடைந்தனர்.

தாக்குதல் நடத்திய பின்னர் பொலீஸாரிடமிருந்து T 56 துப்பாக்கி இரவைட் மற்றும் பொலீஸார் ஒருவரின் தங்கச் சங்கிலி என்பனவற்றை இராணுவத்தினர் அபகரித்துச் சென்றுள்ளனர். (ஐ)

## விமான நிலையத்தில் கண்காணிப்பு தீவிரம்

கொழும்பு, மே 28

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக பயணம் செய்வோர் குறித்து விமான நிலைய நிர்வாகம் அதிக கவனம் செலுத்தி வருகிறது.

பாதுகாப்பு கருதி விமான நிலைய பாதுகாப்பு பிரிவினரும் சுங்க பகுதியினரும் மிகக் கட்டுப்பாடான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

பயணிகள் மீதும் அவர்களது உடைமைகள் மீதும் கடின பரிசோதனை முறைகள் கையாளப்படுகின்றன.

இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், சிங்கப்பூர், ஹொங்கொங் ஆகிய நாட்டுப் பயணிகள் மீது விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று விமான நிலைய அதிகாரிகள் பணிக்கப்பட்டுள்ளனர்.

விமான நிலைய சூழலில் நடமாடும் சந்தேகப் பேர்வழிகளை கைது செய்யவும் விசாரிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ஐ)

### முச்சந்திமுரளி



அப்ப ராகிங் [illegible] என்று சொல்லுங்கோ....!

## 2 தேசத் துரோகிகளுக்கு புலிகள் மரணதண்டனை

யாழ்ப்பாணம். மே 28

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை காட்டிக் கொடுத்த தேசத் துரோகி ஒருவருக்கும் —

ரெலோ தேசத்துரோகி ஒருவருக்கும் — மட்டக்களப்பில் விடுதலைப் புலிகள் மரண தண்டனையை நிறைவேற்றியுள்ளனர்.

மட்டக்களப்பு [illegible]

அழைக்கப்பட்ட தேசத் துரோகி இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல்களை வழங்கி வந்தார் என்றும்—

அவர்களுடன் சேர்ந்து ஒட்டத்தில் பதுங்கியிருந்து போராளி ஒருவரை தாக்கிய நடவடிக்கையில் ஈடுபட்டார் என்றும் —

இதன் போது அப்போராளி வீரச்சாவடைந்தார் என்றும்—

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மருத்துவபீட விரிவுரைகள் நாளை மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 28

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களுக்கான விரிவுரைகள் யாவும் நாளை திங்கட்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப் படவுள்ளதாக யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் எஸ்.வி. பரமேஸ்வரன் நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

தனியார் மருத்துவக் கல்லூரி மாணவர்களை யாழ். பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்தில் சேர்த்துக் கொள்வதை எதிர்த்து மருத்துவ பீட மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட மறியல் போராட்டத்தின் போது மருத்துவபீட மாணவர்களது விரிவுரைகள் யாவும் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

மறியல் போராட்டத்தின் போது விரிவுரையாளர்களை மருத்துவ பீடத்திற்கு வெளியே வைத்து பூட்டிய சம்பவத்துக்கு மருத்துவபீட மாணவர் ஒன்றியத்தினர் துணைவேந்தரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டனர்

[ 2ஆம் பக்கம் பார்க்க]

## "ராகிங்"கை கண்டித்து நகரில் சுவரொட்டிகள்

யாழ்ப்பாணம், மே 28

யாழ். பல்கலைக் கழக சிரேஷ்ட மாணவர்கள் மேற்கொள்ளும் "ராகிங்" கைக் கண்டிக்கும் சுவரொட்டிகள் யாழ். நகரின் பல இடங்களிலும் காணப்படுகின்றன.

பாதிக்கப்பட்ட மாணவர்களால் எழுதி ஒட்டப்பட்டிருந்த இவ்வாறான சுவரொட்டிகள் வேறு சிலரால் பின்னர் கிழித்து எறியப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ் கலட்டிச் சந்தியில் இவ்வாறான சுவரொட்டிகள் கிழிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

(6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் 10 வருட கால பணி மகத்தானது

*இன்று தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் 10 ஆண்டு நிறைவு நாள். யுத்த நெருக்கடிகளினால் அல்லலுற்ற மக்களை ஆதரித்து, ஊக்குவித்து, வளர்த்து, பாதுகாத்து வந்த தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பணி மகத்தானது — போற்றுதற்குரியது தனது 10 ஆண்டு காலத்தில் செய்தவை — செய்கின்றவை — செய்யப் போகின்றவற்றை விளக்குகின்றது இக் கட்டுரை*

கறுப்பு ஜூலை என்று வர்ணிக்கப்படும் ஸ்ரீலங்காவின் 1983 ஆம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரத்தைத் தொடர்ந்து வடக்கு, கிழக்கில், நிலைகொண்டிருந்த இராணுவ; அரசபயங்கரவாதிகளால் தமிழ் மக்கள் மீது அவிழ்த்துவிடப்பட்ட அடாவடித்தனத்தினால் தமது உடைமைகள் அனைத்தையும் உதறி, உயிருக்காகப் போராடி அண்டைநாடான இந்தியாவில் அவர்கள் தஞ்சம்புகுந்தனர்.

பல இலட்சக்கணக்கில் புலம்பெயர்ந்த மக்களை அன்றைய தமிழ்நாட்டுமாநில அரசு ஓரளவு ஆதரித்து வந்த போதிலும், மக்கள் எதுவித கட்டுப்பாடுமின்றி, ஒழுங்கமைப்பின்றி தான்தோன்றிகளாக அங்குமிங்கும் நடமாடத் தொடங்கினர். இதைக்கண்ணுற்ற சிலபொது நல ஆர்வலர்கள் இம்மக்களை ஒழுங்கமைக்கும் நோக்கமாகவும், கிடைக்கும் உதவிகளை எல்லோருக்கும் கிடைக்கும் வண்ணமாகவும் ஒரு பொதுநலவாய அமைப்பை உருவாக்கமுயன்றதன் பிரதிபலிப்பே தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உதயமாகும்.

1985ஆம்ஆண்டு மே மாதம் 28 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு தமிழ்நாட்டின் பெரும்பாலும் நிவாரணம், புனர்வாழ்வு போன்ற வேலைகளில் ஈடுபட்டுவந்தது.

பின்னர் 1987ஆம் ஆண்டு அமைதியென்ற போர்வையில் இலங்கையில் வந்திறங்கிய இந்திய இராணுவ புண்ணியவான்களாலும், ஸ்ரீலங்கா இராணுவ தர்மிஷ்ட சீலர்களாலும் மக்கள் பெருமளவில் வடக்கிலும் கிழக்கிலும் இடம்பெயர்ந்தார்கள் வடபகுதி— குறிப்பாக— யாழ். மாவட்டக் கரையோரப்பகுதிகளிலிருந்தும். கிழக்கு மாகாண மட்டக்களப்பு, திருகோணமலைப் பகுதிகளிலிருந்தும் மக்கள் இராணு நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களில் குடியேறத்தொடங்கினர்.

1990ஆம் ஆண்டு நடுப்பகுதியில் தொடங்கிய இரண்டாவது ஈழப்போரினாலேயே தமிழீழமக்கள் பெரிதளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். மக்கள் தம் உடைமைகளையும் சொத்துச் சுதந்திரங்களையும் இழந்த நிலையில் ஏதிலிகளாக பாடசாலைகளிலும், கோயில்களிலும் தஞ்சம்கோரினர்.

இராணுவ நடவடிக்கைகள் உச்சக்கட்டத்தில் இருக்கும் போது அரச திணைக்களங்கள்-யாழ். செயலகம் மற்றும் யாழ். வைத்தியசாலை போன்றவை செயலிழந்த வேளையில் மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு. அரசசார்பற்ற நிறுவனங்களைச் சார்ந்திருந்தது. தமிழ் நாட்டிலிருந்து தனது சேவைகளை வடகிழக்கிற்கு மாற்றிய தமிழர் புனர்வாழ்வுக் கழகம், இந்த வகையில் பெரும் பங்காற்றியுள்ளது.

எங்கெல்லாம் மக்கள் அல்லற்பட்டார்களோ அங்கெல்லாம் த. பு. க. சென்று மக்களை அரவணைத்து ஆதரவு கூறி நெறிப்படுத்தியது. வேண்டிய சமைத்த உணவுகள், உலர் உணவுகள் மற்றும் தேவையான அத்தியாவசிய வசதிகளை வழங்கியது. இன்றோ நாளையோ தமது சொந்த இடங்களுக்குச் செல்லலாமென்ற நம்பிக்கையோடு வந்த மக்கள் மாதக் கணக்காக— வருடக்கணக்காக - முகாம்களில் தங்க வேண்டிய நிர்ப்பந்தம் தமிழ் மக்கள் மீது நிர்ப்பந்திக்கப்பட்டது.

இந் நிலையில் ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்று தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் முகாம்களைப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்று நாளடைவில் தனது நடவடிக்கைகளை முகாம்களில் வதியும் மக்களின் நலன் கருதியும், இடம்பெயர்ந்து முகாம்களில் வதிய இடமின்றி தமது உறவினரோடும் நண்பர்களோடும் வதியும் மக்களையும் மற்றும் யுத்த நெருக்கடிகளால் பாதிப்புற்று ஒருவேளை சோற்றிற்கே வசதியின்றி நலிவுறும் மக்களின் நலன்கருதியும் செயற்பட வேண்டி வந்தது.

கடந்த 10 ஆண்டுகளின் வன்செயலின் [illegible] பாதிப்புகளின் [illegible] எம்மக்கள், இடம்பெயர்ந்து குறைந்தபட்ச வாழ்க்கைச் சூழலிலாவது தமது அன்றாட வாழ்க்கையைத் தொடரக் கூடியவகையிலும், தங்கு நிலையிலிருந்த மக்களை சுயசார்பு நிலையில் தொழில் செய்யக் கூடியவகையிலும், சமூக அபிவிருத்தியை இலக்காகவைத்து சமூகநலத் திட்டங்கள் மனித வள மேம்பாட்டுத் திட்டங்கள் என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டவேலைத் திட்டவகையிலும் நிவாரணம், புனர்வாழ்வு, அபிவிருத்தியென்ற முழுமையான செயற்பாட்டிலும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஈடுபட்டுள்ளது.

## நிவாரணமும் புனர்வாழ்வும்

1985 ஆம் ஆண்டு தென்னிந்தியாவில் ஆரம்பிக்கப் பட்டதிலிருந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நிவாரணமும் புனர்வாழ்வும் பணியிலும் மிகவும் ஈடுபட்டு வருகின்றது. தொடர்ந்து நடைபெற்றுவரும் இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்வு என்பது சாதாரண நிகழ்வாகப் போய்விட்டது.

1985 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரையும் நிவாரணம், புனர்வாழ்வு வேலை தொடர்ந்து செல்கின்றது. ஆனால் சிறுவித்தியாசம் - அன்று தென்னிந்தியாவில் ஆரம்பிக்கப்பட்ட பணி இன்று தமிழீழத்தில் தொடர்கின்றது.

முகாம் பராமரிப்பு, சுகாதாரம், குடிநீர் வசதி, போஷாக்குப் புனர்வாழ்வு போன்றவை பேணப்படுகின்றன. காலத்தின் தேவையைக் கருத்திற் கொண்டு பணியாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

## போஷாக்குப் புனர்வாழ்வு

தொடர்ந்து நடைபெறும் யுத்தத்தினாலும், ஸ்ரீலங்கா அரசினது பொருளாதாரத் தடையினாலும், உடல்ரீதியாகவும், உளரீதியாகவும் பாதிக்கப்பட்ட தாய்மாருக்குப் பிறக்கும் குழந்தைகள் பிறக்கும் போதே நிறைகுறைவாகத்தான் பிறக்கின்றனர். பெரும்பாலான குழந்தைகள் தமது அடுத்த பிறந்தநாளை கொண்டாடுவதற்கு முன்னதாகவே இறந்துவிடுகின்றன. இது மிகையல்ல.

அண்மையில் யாழ். மருத்துவபீட சமூதாய மருத்துவத் துறையினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் மதிப்பீடே இது.

இதைத்தொடர்ந்து த. பு. க. போஷாக்குக் குறைந்த சிறார்களுக்கு சத்துணவு வழங்கும் நோக்கமாக போஷாக்கு நிலையமொன்றை கொக்குவிலில் ஆரம்பித்தது.

இதேபோன்ற நிலையங்கள் யாழ்ப்பாணத்தில் அம்பன் இராஜன்நகரிலும், கெற்பலி பண்டிதர்குடியிருப்பிலும், வன்னிப்பிரதேசத்தின் மன்னார்மாவட்ட மடுவிலும், முல்லைத்தீவு, மாவட்டத்தில் மூங்கிலாற்றிலும் அமைக்கப்பட்டன.

## பாலர்பாடசாலைகள்

த. பு. க. வினால் இடம் பெயர்ந்தோர் முகாம்களிலும், பின்தங்கிய கிராமங்களிலும் பாலர்பாடசாலைகளை அமைத்து நடத்தப்படுகின்றது. வடமாகாணத்தில் 5 மாவட்டங்களிலும் 111 பாடசாலைகளில் 130 ஆசிரியர்களைக்கொண்டு 2,705 பிள்ளைகள் கல்வி பயில்கின்றனர். இப்பிள்ளைகளுக்கு பாடசாலை நாட்களில் சத்துணவு வழங்கப்படுகிறது.

## 1,000 பிள்ளைகள் தத்தெடுக்கும் திட்டம்

நடைபெற்றுக்கொண்டிருந்த உள்நாட்டுப் போரினால் தாய், தந்தையரை இழந்து அல்லது எவரேனும் ஒருவரையிழந்து, தமது கல்வியைத் தொடரமுடியாத பாடசாலை மாணவருக்காவது, இதற்கான நிதியை வெளி [illegible] இருக்கும் தமிழர்கள் உதவுகின்றனர். [illegible] குடும்பம் ஒரு பிள்ளையையோ அல்லது அதற்கு மேற்பட்ட பிள்ளைகளையோ தமது பொறுப்பில் தத்தெடுத்து அப் பிள்ளையின் படிப்புச் செலவைப் பொறுப்பேற்கின்றனர்.

தத்தெடுக்கும் பெற்றோர் பிள்ளையுடன் நேரடித் தொடர்பு வைத்திருக்கலாம். ஆனால், பணம் த. பு. க. மூலமாகவே கொடுக்கப்படுகின்றது. பிள்ளையும் தமது உறவினருடனேயே இருக்கும்.

## ஜேர்மன் சமஷ்டிக் குடியரசு உதவித்திட்டம்

வட — கிழக்கில் இடம் பெயர்ந்தோருக்காக உதவும் நோக்கோடு ஜேர்மன் சமஷ்டிக் குடியரசினால் வழங்கப்பட்ட நிதியுதவியில், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு யாழ் மாவட்டத்திற்கு 10 மில்லியன்ரூபாவும், முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 0.56 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டு, எமது முன்மொழிகளின் பிரகாரம் வேலைகள் யாவும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

இதில் யாழ். மாவட்டத்தில் மாத்திரம் 907 புதிய குடிசைகளும், 476 குடிசைகள் திருத்தமும், 46 குழாய்க்கிணறுகளும், 3ஆயிரம் குடும்பங்களுக்கு பாய், பெற்சீற் அரிக்கன்லாம்பு போன்றவைகளும், 2ஆயிரம் குடும்பங்களுக்கு வாளிகளும் வழங்கப்பட்டுள்ளன. இவற்றைவிட இவ்வுதவியின்கீழ் முல்லை. மாவட்டத்தில் 80வீடுகள் அமைக்கப்பட்டன.

## சிறுவர் இல்லங்கள்

பெரும் பாதிப்புக்குள்ளாகும் சிறுவர்களை எடுத்துப் பராமரிக்கும் பொறுப்பு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு ஏற்பட்டது. யுத்தத்தில் பெற்றோர் இருவரையும் அல்லது யாராவது ஒருவரை அல்லது பெற்றோர் இருந்தும் யுத்தம் காரணமாக பராமரிக்க முடியாத நிலையிலுள்ள பிள்ளைகளை பராமரிப்பதற்காக கிளிநொச்சியில் இரு நிலையங்கள்— குருகுலம், காந்தி நிலையம் என்பன உருவாக்கப்பட்டன.

இந் நிலையம் ஒவ்வொன்றிலும் இன்று 150க்கு மேற்பட்ட பிள்ளைகள் தங்கி வாழ்கின்றனர். இவர்களுக்கான உணவு, உடை, கல்வி சுகாதாரம் போன்றவற்றை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கவனித்துவருகின்றது.

இவைபோன்று இன்னும் பல திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றபோதிலும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பத்தாண்டு நிறைவையொட்டி பின்வரும் திட்டங்கள் இவ்வருடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## எழுச்சி உதயம்

எழுச்சி உதயம் என்றழைக்கப்படும் கிராமிய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வடகிழக்கிலுள்ள 150 பின்தங்கிய கிராமங்கள் இனங்காணப்பட்டு, அவற்றின் சமூக பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

வறியவர்களை இனங்கண்டு அவர்களை வறுமையில் இருந்து தூக்குவதே இதன் செயற்பாடு, கிராமிய மேம்பாட்டுத் திட்டங்கள், வீடு, கல்வி, சுகாதாரமும் போஷாக்கும், தொழில் வாய்ப்பு, விவசாயம், புனர்வாழ்வு போன்றவற்றை அடக்கும்.

## புத்தொளி

2000 ஆம் ஆண்டளவில் அனைவருக்கும் கல்வியென்ற ஐ. நா. பிரகடனத்தை மையமாகக்கொண்டு "புத்தொளி" என்ற திட்டமானது கிராமியத்தேவைகள் கிராமிய முன்னேற்றத்தை தடைப்படுத்தும்காரணிகள், கிராமிய சுய விருத்தி என்பவற்றைக் கவனத்திற் கொள்ளும் வகையிலான கல்வி முயற்சிகளில் செயற் திட்டங்களை வகுப்பதேயாகும்.

இதன் முக்கியாம்சமாக இத்திட்டத்தின் கீழ் சமுதாயக்கல்வியென்ற விடயத்திற்கு முக்கியத்து வமளித்து வளர்ந்தோருக்கான கல்வித் திட்டத்தை த. பு. க. முன்வைக்கின்றது.

## தாருகம் சேமிப்புத் திட்டம்

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்ட சேமிப்புத் திட்டங்கள் போன்று இவ்வாண்டும் பாடசாலை மாணவர்களிடையேயும் கிராம மட்டங்களிலும் சேமிப்பை ஊக்குவிக்கும் நோக்கமாக இத்திட்டம் இன்று ஆரம்பிக்கவிருக்கின்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் செயற்படுத்தப்பட்ட, செயற்படுத்துகின்ற, செயற்படுத்தப்படவிருக்கும் திட்டங்கள் பலவற்றைப் பார்த்தோம், இவை கழகத்தின் செயற்பாடுகளின் பெரும்பான்மையானவை யேயன்றி, முழுமையானதல்ல, இத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு உதவிசெய்த உள்ளூர், வெளிநாட்டு நிதிநிறுவனங்களுக்கும் நல்மனம் கொண்ட நல்கொடையாளர்களுக்கும் நன்றிகூறுவதுடன் அவர்கள் தொடர்ந்தும் இவ்வுதவியை நல்குவர் என்ற நம்பிக்கைஎமக்குண்டு. கடந்த கால அனுபவங்களை மனதிற் கொண்டு எதிர்காலத்தில் இன்னும் திறம்படச் செயற்பட வாழ்த்துகின்றோம். ★

---

## புலிகளின் குரல் வானொலியில்

28 - 05 - 1995

ஞாயிறு இரவு

- ★ 8-02 — இசையரங்கம் — பாடுபவர் திரு. வி. சி. சேகரம்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — தொடர் நாடகம் — கருணை ரவி எழுதும் "காணி நிலம் வேண்டும்" அங்கம்—12

29 - 05 - 1995

திங்கள் காலை

- ★ 7-03 — மாவீரர் வணக்கம்
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலியில்

ஞாயிறு மாலை

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-03 — எழுச்சிக் கீதம்
- ★ 5-10 புதியவை
- ★ 5-15 — மழலைகளுக்காக
- ★ 5-30 — கதம்பம்
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
- ★ 6-02 — உங்கள் தெரிவு

---

## மருத்துவ...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

பேரில் மருத்துவ பீடச்சபை நாளை திங்கள் முதல் விரிவுரைகளை ஆரம்பிக்கத் தீர்மானித்திருப்பதாக மருத்துவ பீடாதிபதி தெரிவித்தார்

---


## தமிழீழ சட்டக் கல்லூரி
## கல்வி ஆண்டு 1995 - 1996
## மாணவர்களுக்கான
## விண்ணப்பம் கோரல்

தமிழீழ சட்டக் கல்லூரியின் மேற்படி ஆண்டுக்கான பயிற்சி விரிவுரைகள் நடைபெற இருப்பதால் இக்கல்வி நெறியைப் பயில்வதற்கு கீழ்க்குறிப்பிடப்படும் தகைமைகளை உடைய மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

காலம்: மூன்று வருடங்கள்

கல்வித் தகைமை:
க. பொ. த. (உ/த) பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன், அவற்றில் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

வயது: 19 — 35

விண்ணப்பம் செய்ய விரும்புவோர்கள் அதற்கான விண்ணப்பப் படிவத்தை கோண்டாவில் பொற்பதி வீதியில் உள்ள நீதி நிர்வாகத்துறையின் நடுவப்பணியகம், வன்னி, மன்னார், முல்லைப் பிரதேச நீதி நிர்வாகத்துறை] கிளை - நடுவகப்பணியகம், தமிழீழ மாவட்ட நீதிமன்றுக்களின் செயலகங்கள் ஆகிய இடங்களில் பெற்றுக்கொள்ளலாம். இவ்விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து 10-06-1995 ஆம் திகதிக்கு முன்னர் கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நடுவப் பணியகம்,
நீதி நிர்வாகத்துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
கோண்டாவில், யாழ்ப்பாணம்.

[சி-1275]



## வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய
## மகாசபையின் வருடாந்த பொதுக் கூட்டம்

காலம்: இன்று [28 . 05 - 95] ஞாயிறு பி.பகல் 3-30 மணி

இடம்: ஆலய மண்டபம்

அனைத்து ஆயுள் அங்கத்தவர்களையும் தவறாது சமூகம் கொடுக்குமாறு அன்பாக வேண்டிக் கொள்கிறோம்.

வி. எஸ். இரத்தினசபாபதி
செயலாளர்,
பரிபாலனசபை.

27 - 05 - 95. [36830]



## வாழ்த்துகின்றோம்

### திரு. சே. சிவராசா B. Sc., Dip.
(பிரதி அதிபர், யா/இந்துக்கல்லூரி)

இன்று [28-5-95] தமது அகவை அறுபதைப் பூர்த்தி செய்யும் திரு. சே. சிவராசா அவர்கள் பொறுப்புள்ள பிரதி அதிபராகவும், நல்லாசிரியனாகவும், சிறந்த சமூக சேவையாளராகவும் மட்டுமல்லாது ஒரு நல்ல எழுத்தாளனாகவும், கவிஞராகவும் பழகுவதற்கு ஏற்ற நண்பனாகவும் விளங்குகின்றார்.

அன்னாரும் அவர் தம் பத்தினியும் பிள்ளைகளும் எல்லாச் செல்வச் சிறப்புகளையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வேண்டுமென நல்லைக் கந்தன் அருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.

ஆ. பொ. குலசிங்கம் குடும்பம்,
நா. ஸ்ரீகாந்தன் குடும்பம்.

இல. 19, சினிவாசகம் வீதி,
யாழ்ப்பாணம். [8562]



## புதிய பெரடெனியா இன்ஸ்ரிரியூட்

கே. கே. எஸ். வீதி, கொக்குவில்

### A / L தமிழ்
### திரு. S. கணேசலிங்கம்

அநேக மாணவரின் வேண்டுகோளுக்கு இணங்க திரு. S. கணேசலிங்கம் ஆசிரியரின் வகுப்புக்கள் நமது நிறுவனத்தில் 18-05-95 தொடக்கம் நடைபெறுகின்றன. மாணவரின் நலனைக் கருத்தில் கொண்டு பின்வரும் நேர அட்டவணையில் வகுப்புக்கள் நடைபெறும்.

செவ்வாய் 4-00 — 5-00 மணி
வியாழன் 4 00 — 5-00 மணி

(சி-1418)



## யாழ் / வைத்தீஸ்வரா கல்லூரி

பழைய மாணவ மன்றத்தின் ஆண்டு விழா 1995-07-02 ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருப்பதால், அங்கத்துவத்தை புதுப்பிப்போரும், புதிதாக சேர விரும்புவோரும் செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

1. பிரேரணைகள் இருப்பின் 1995-06-14க்கு முன்னர் செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.
2. ப. மா. மன்றம் தொடர்பில்லாத பழைய மாணவரும், அங்கத்துவர் அனைவரும் தங்கள் தற்போதைய விலாசங்களை தந்துதவவும்.

செ. சுப்பிரமணியம்,
செயலாளர், ப. மா. மன்றம்.

வைத்தீஸ்வரா கல்லூரி,
யாழ்ப்பாணம். (36785)



## பகிரங்க அழைப்பாணை
## தமிழீழ மாவட்ட நீதிமன்றம்
### சுன்னாகம்

வழக்கு இல. பணம் 516/94

திரு. கந்தசாமி,
திருநாவுக்கரசு சிவமதி வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்,
தற்சமயம் சூராவத்தை,
சுன்னாகம்.

வழக்காளி

எதிராக

1. திரு. கந்தசாமி விஜயகுமார்,
   ஆடியபாதம் வீதி,
   கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
2. திரு. நாகலிங்கம் இராமநாதன்
   பட்டினசபை வீதி, சங்கானை.

எதிராளி

மேற்படி வழக்கில் வழக்காளி மேற்படி எதிராளிகளுக்கெதிராக தனது த 1 - 8108 என்ற மோட்டார் காரை விற்பனை செய்த வகையில் வர வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

குறித்த வழக்காளியின் கோரிக்கை சம்பந்தமாக 1 ஆம் எதிராளியாகிய நீர் உமது உரிமைக் கோரிக்கைகளை இந் நீதிமன்றத்துக்கு 30 - 06 - 1995 ஆம் திகதி காலை 9-00 மணிக்கு சமூகமளித்து அணைக்கும்படி இதனால் கட்டளை இடப்படுகிறீர்.

| | |
|---|---|
| வரைவு | நீதிமன்றக் |
| வழக்காளியின் | கட்டளைப்படி, |
| சட்டவாளர், | சு. இராமலிங்கம் |
| க. சிவசுப்பிரமணியம் | பதிவாளர் |
| கலைமாணி, | |
| சட்டமாணி | பதிவாளர் |
| சட்டத்தரணி, | தமிழீழ மாவட்ட |
| உறுதிஎழுத்தாளர், | நீதிமன்று, |
| சத்தியப்பிரமாண | சுன்னாகம். |
| ஆணையாளர், | |
| ஊரெழு, சுன்னாகம். | [8417] |



## வீட்டுக்கிருத்திய அழைப்பு



### திருமதி
### தெய்வானைப்பிள்ளை சினிவாசகம்

27 - 04 - 95 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்ப விளக்கு திருமதி தெய்வானைப்பிள்ளை சினிவாசகம் அவர்களின் வீட்டுக்கிருத்தியம் 28 - 05 - 95 ஞாயிறு முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.

இவ் வைபவத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்தியின் பொருட்டு பிரார்த்திப்பதுடன் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்;
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இணுவில் மேற்கு, இணுவில். [36832]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ராவ்வின் காங்கிரஸுக்கு மாற்றுக் கட்சியாக உருவெடுக்க முயல்கின்ற போட்டிக் காங்கிரஸ்

இந்தியாவின் மிகப் பழைமை வாய்ந்த அரசியல் கட்சியான காங்கிரஸ்கட்சி மீண்டும் பிளவுபட்டுள்ளது.

உத்தரப் பிரதேச முன்னாள் காங்கிரஸ் தலைவர் என். டி. திவாரியும் —

முன்னாள் மனிதவள அமைச்சர் அர்ஜுன் சிங்கும் இணைந்து இந்தியத் தேசிய காங்கிரஸ் என்ற பெயரில் போட்டிக் காங்கிரஸை உருவாக்கி உள்ளனர்.

புதுடில்லியில் கடந்த 20 ஆம் திகதி நடைபெற்ற போட்டிக் காங்கிரஸ் கூட்டத்தில் 25பேர் கொண்ட காரியக் கமிட்டி ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

எம். பிக்கள், முன்னாள் அமைச்சர்கள், மாநிலங்களின் தலைவர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையான காங்கிரஸ் அதிருப்தியாளர்கள் என். டி. திவாரி — அர்ஜுன்சிங் அணியில் சேர்ந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

**21 எம். பிக்கள் ஆதரவு**

மொத்தம் 21 காங்கிரஸ் எம். பிக்களின் ஆதரவு தமக்கு இருப்பதாக போட்டிக் காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் தெரிவிக்கின்றனர்.

**வெளி உலகில்**

இது சரியாக இருக்குமானால் நரசிம்மராவ் அரசு மீண்டும் 1993 இன் நிலைக்கு மீண்டும் தள்ளப்பட்டுவிட்டது என்றே சொல்ல வேண்டும்.

**சிறுபான்மை அரசாக பதவிக்கு வந்த அரசு**

நரசிம்மராவ் தலைமையிலான தற்போதைய அரசு 1991 ஜூனில் ஒரு சிறுபான்மை அரசாகவே பதவிக்கு வந்தது.

ஆரம்பத்தில் பல நம்பிக்கையில்லாத தீர்மானங்களில் இருந்தும் அது தப்பிப் பிழைத்திருந்தது. பின்னர் எதிர்க்கட்சியைச் சேர்ந்த சில எம். பிக்களை கட்சிக்குள் இழுத்துக் கொண்டது மூலமும் சில மாநிலத்தேர்தல்களில் வெற்றியீட்டியது மூலமும் அது தனது பெரும்பான்மை பலத்தை தக்க வைத்துக் கொண்டிருந்தது.

தற்போது ஆளும் காங்கிரஸுக்குள் ஏற்பட்டுள்ள நெருக்கடி 1977ஆம் ஆண்டு இடம்பெற்ற நெருக்கடிக்குப் பின்னர் மிக மோசமானது என அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

1977 தேர்தலில் காங்கிரஸ் கட்சி தோல்வி அடைந்த

## கட்சிகள் அடிக்கடி உடைந்துபோவது இந்திய அரசியலில் ஒரு சாபக்கேடு

போது இந்திராகாந்திக்கு எதிராகக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் பலர் போர்க்கொடி தூக்கினார்கள். காங்கிரஸ் — ஐ என்ற பெயரில் புதிய கட்சியை அமைத்து தனக்கு எதிரான சதியை வெற்றிகரமாக முறியடித்திருந்தார் இந்திராகாந்தி.

ஆனால் நரசிம்மராவ்வுக்கு இன்று எழுந்துள்ள நிலைமை வேறு.

நரசிம்மராவ்வினால் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட அதிருப்தியாளர்கள் ஒன்று கூடி போட்டிக் காங்கிரஸை உருவாக்கி விட்டனர். கட்சிக்குள் தொடர்ந்து இருப்பவர்களும் நரசிம்மராவ்வுக்கு நூற்றுக்கு நூறு விசுவாசம் என்று கூற முடியாது.

1996 பொதுத் தேர்தலில் நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரஸுக்கும் இந்து தேசியவாதக் கட்சியான பாரதீய ஜனதாவுக்கும் நிகராக தமது போட்டிக் காங்கிரஸ் கட்சியைக்கட்டி எழுப்பும் பெரும் பொறுப்பு அர்ஜுன் சிங் மீதும் என். டி. திவாரி மீதும் சுமத்தப்பட்டுள்ளது.

இவர்கள் கட்சியை வெற்றிகரமாகக் கட்டி எழுப்புவார்களா? அல்லது உடையவிடுவார்களா? என்பது இன்று எழும் கேள்வி.

**சோனியாவின் அரசியல் செல்வாக்கு**

ராஜீவ் காந்தியின் மனைவி சோனியா காந்தி இந்திய அரசியலில் இன்றும் சக்தி மிக்க ஒருவராக இருந்து வருகிறார்.

1991 ஆம் ஆண்டு ராஜீவ் காந்தி கொலையுண்ட பின்னர் இத்தாலிய நாட்டவரான சோனியா காந்தியை அரசியலுக்கு இழுக்க முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. ஆனால் சோனியா காந்தி பிடிவாதமாக மறுத்துவிட்டார். அதன் பின்பே தலைமைப் பதவி நரசிம்மராவைச் சென்றடைந்தது.

சோனியா காந்தியை அரசியலுக்கு கொண்டு வந்து அவரிடம் காங்கிரஸின் தலைமைப் பதவியை ஒப்படைப்பது மூலமே சரிந்து வரும் காங்கிரஸின் செல்வாக்கை நிமிர்த்தி விட முடியும் என்று கருதப்பட்டு வந்தது.

ஆனால் சோனியா காந்தியின் ஆதரவைப் பெற பிரதமர் நரசிம்மராவ் இதுவரை தவறிவிட்டார்.

சோனியா காந்தியின் அனுதாபம் காங்கிரஸில் உள்ள அதிருப்தியாளர்கள் பக்கமே இருந்து வருகிறது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணை இழுத்தடிக்கப்படுவதாகவும் —

இதற்கு நரசிம்மராவின் மெத்தனமான போக்கே காரணம் என்றும் — சோனியாகாந்தி கருதுகிறார்.

புதுடில்லியில் கடந்த வாரம் இடம்பெற்ற ராஜீவ் காந்தி நினைவு தினக் கூட்டத்தில் கலந்து கொள்ள நரசிம்மராவ் வந்தபோது, அவருக்கு வெறுப்பூட்டக் கூடிய விதத்தில் சோனியா காந்தி நடந்து கொண்டார்.

தற்போதைய நிலையில் சோனியா காந்தியை தனது பக்கம் இழுப்பது மூலமே நரசிம்மராவ் தோல்வியில் இருந்து தப்ப முடியும்.

ராஜீவ்காந்தி கொலை வழக்கைக் கையாளும் பொறுப்பு தற்போது அமைச்சர் பி சிதம்பரத்திடம் விடப்பட்டுள்ளது. அது மட்டும் அல்ல நரசிம்மராவ் விரைவில் செய்ய உள்ள அமைச்சரவை மாற்றங்களில் சோனியா காந்திக்கு ஆதரவான புதிய முகங்கள் பல அமைச்சரவையில் இடம் பெறும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

**ராவ்வை விழுத்துவது நோக்கம் அல்ல**

தற்போதைய நிலையில் நரசிம்மராவ் அரசை விழுத்துவது போட்டிக் காங்கிரஸின் நோக்கம் அல்ல.

நரசிம்மராவ் அரசு கவிழ்ந்து இடைக்காலத் தேர்தல் நடத்தப்பட்டால் அதனால் லாபம் அடைவது இனவாதக் கட்சிகள் தான்.

உடன் தேர்தல் நடந்தால் இந்த தேசியவாதக் கட்சியான பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சிக்கு வருவதற்கே கூடுதலான வாய்ப்பு இருந்து வருகிறது என்று நம்பப்படுகிறது.

545 உறுப்பினர்களைக் கொண்ட இந்திய நாடாளுமன்றத்தில் பாரதீய ஜனதாக் கட்சி 119 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

பாரதீய ஜனதாக் கட்சியையும் நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரஸையும் தோற்கடிப்பதற்கு மிதவாத கட்சிகளுடனும் எதிர்க்கட்சியில் உள்ள இடதுசாரிகளுடனும் போட்டிக் காங்கிரஸ் கூட்டுச் சேரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**ராவ் மீதான முக்கிய குற்றச்சாட்டுக்கள்**

ஊழல் பேர்வழிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கிறார் என்பதும் —

இந்தியாவின் 90 கோடி மக்களில் 12 சதவீதமானவர்களான முஸ்லிம்களின் வெறுப்பைச் சம்பாதித்து

**- சஞ்சயன் -**

விட்டார் என்பதுமே — நரசிம்மராவ் மீதான பிரதான குற்றச்சாட்டுக்கள் ஆகும்.

1992 இல் 128 கோடி டொலர் பம்பாய் பங்குச் சந்தை ஊழல் குற்றச்சாட்டில் இருந்து நரசிம்மராவ் இன்னும் தன்னை முழுமையாக விடுவித்துக் கொள்ள முடியவில்லை.

1992 டிசம்பரில் அயோத்தி பாபர் மசூதி இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டதற்கான தார்மீக பொறுப்பும் நரசிம்மராவ் மீதே சுமத்தப்பட்டுள்ளது


16ஆம் நூற்றாண்டு கால முஸ்லிம்களின் பழைமை வாய்ந்த புனித ஸ்தலமான பாபர் மசூதி இடிக்கப்படுவதற்கு முன்னர் பாரதீய ஜனதாக் கட்சியுடனும் —

அக்கட்சியின் அமைப்பான RSS என அழைக்கப்படும் தேசிய தொண்டர் படையினருடனும் — நரசிம்மராவ் ரகசிய பேச்சு நடத்தியிருந்தார் என போட்டிக் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான அர்ஜுன்சிங் குற்றஞ்சாட்டி வருகிறார்.

பாபர் மசூதி இடித்துத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## திவாரி — அர்ஜுன்சிங் கூட்டு நிலைக்குமா?



போட்டிக் காங்கிரஸின் எதிர்காலம் அதன் ஒற்றுமையிலும் சோனியா காந்தி அளிக்கும் ஆதரவிலுமேயே பிரதானமாகத் தங்கி இருக்கிறது.

# 'அவ்ரோ' விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதன் பின்னணியில் எழுந்துள்ள சில சந்தேகங்கள்

புலிகளின ஏவுகணைத்தாக்குதலினால இரு "அவ்ரோ" விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதன பின்னணி குறித்து தென்னிலங்கைத் தகவலகளின் தொகுப்பு இது.

ஹெலி, பொம்மர், சுப்பர் சொனிக், புக்காரா, அவ்ரோ— இவையெல்லாம் வடபகுயில் உள்ள குழந்தைகள் முதல் கிழவர்கள் வரை அன்றாடம் உச்சரித்த வார்த்தைகளாக இருந்தது ஒரு காலம்

ஆனால் இன்று ரயில், மின்சாரம், தொலைபேசி, சினிமாப் படம்' தொலைக்காட்சி போன்ற சாணநகரிய பொருள்களுடன் இவைகளும் சேர்ந்துவிட்டன.

கோடி கோடியாக கொட்டிக் கொடுத்த ஸ்ரீலங்கா அரசினால் வாங்கிக் குவிக்கப்பட்ட விமானங்களும், ஹெலிகளும் இன்று இரத்மலானை விமானநிலையத்தில் செயலற்று அணிவகுத்து நிற்கின்றன.

மணிக்கு ஒரு மாவட்டமாகச் சென்று, படையாளர்களுக்கு மருந்துகள், உணவுகள், ஆயுதங்கள் என்று அள்ளிக் கொடுத்து தரையிலே நிற்க நேரமின்றி அரக்கப் பரக்கப் பறந்து திரிந்த இந்தப் "பருந்துகள்" இன்று பறக்கும் ஆசையிருந்தும் தரையை விட்டு எழும்ப முடியாது முடங்கிக் கிடக்கின்றன.

இதற்கெல்லாம் மூல காரணமாக அமைந்தவை கடந்த 28, 29ஆம் திகதிகளில் விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட ஏவுகணைத் தாக்குதல்கள்தான் என்பது உண்மையானாலும் அதையும் தாண்டி படையினருள் குறிப்பாக விமானப் படை உயர் மட்டத்தில் ஏற்பட்டுள்ள பனிப் போர், விரக்தி, வெறுப்பு என்பனவும் இதற்கு ஒரு காரணம் என்கிறது கொழும்புச் செய்திகள்.

ஏப்ரல் 28ஆம் திகதி மாலையிலும், 29ஆம் திகதி காலையிலும் இரு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. அவற்றில் 29ஆம் திகதி காலையில் குடாநாட்டின் எல்லைக்குள் வந்து ஏவுகணையை ஏற்றுக்கொண்டு இழுத்துப் பறித்துச் சென்று இனியும் இடலாது என்ற நிலையில் குட்டிக்கரணம் போட்டுவிட்டு நவக்கிரியில் விழ்ந்து... வெடித்து...... எரிந்து... தணலாகி..... புகைந்து...... அணைந்து போனது அந்த விமானம்.

ஆனால் இந்த விமானத்தின் வீழ்ச்சி தெற்கிலே படையினர் மத்தியில் உள்வீட்டு பிரச்சினையாக புகைந்து.. தணலாகி... எரிந்து .. வெடிக்கத் தயாராகிக் கொண்டிருக்கிறது.

அந்த பிரச்சினை என்ன, ஏது என்று அறிவதற்கு முன் தமிழ் சினிமாப் பாணியில் ஒரு முன் கதைச் சுருக்கம்.

**பலாலியில் பரபரப்பு**

28 ஆம்திகதி ஏப்ரல் மாதம். வழமையான யுத்த சூழ்லையிலும் பரபரப்புகளுடன் இருக்கும் பலாலி தளம். அன்று இன்னும் பரபரப்புடனும் மிகுந்த பதற்றத்துடனும் காணப்பட்டது.

அராலித் துறையில்— சரவணைப் பகுதிக்குள்— விடுதலைப் புலிகள் புகுந்து காக்கி பன்னிரு இராணுவத்தினரை கொன்றுவிட்டதால் ஏற்பட்ட பரபரப்பும் பதற்றமும் தான் அது.

அவற்றுக்கு மத்தியில் கொழும்பில் உள்ள தலைமைக் காரியாலயத்திலிருந்து அவசரமாக— ஆனால் இரகசியமான— செய்தி ஒன்று வருகிறது. மறுநாள் காலையில் சில வி. வி. ஐ. பிக்கள் (அதி விசேஷமான முக்கிய பிரமுகர்கள்) வடக்கின் முக்கிய தளங்களைப் பார்வையிட வரப் போகிறார்கள் எனவே அதற்கான ஏற்பாடுகளை கவனிக்கவும் என்கிறது அந்தச் செய்தி

பரபரப்பும், பதற்றமும் இரட்டித்துவிட, கூடுதலாக ஓர் எதிர்பார்ப்பும் ஏற்படுத்துகிறது. யார் அந்த முக்கிய பிரமுகர்கள்?

ஏற்பாடுகள் துரித கதியில் மேற்கொள்ளப்படுகின்றன.

பிற்பகல் சுமார் 2 மணியளவில் அவ்ரோ விமானம் ஒன்று பலாலி ஓடுபாதையில் ஓடித் தரை இறங்குகிறது. அராலிச் சம்பவம் பற்றி விசாரிக்க வந்த குழுவினர் அதிலிருந்து இறங்குகின்றனர். அவர்கள் தங்களுடன் ஓர் இரகசிய கடிதத்தையும் எடுத்து வருகின்றனர்.

**அந்தப் பிரமுகர்கள்**

29 ஆம் திகதி காலையில் ஜனாதிபதியின் செயலாளர்



விடுதலைப் புலிகளின் ஏவுகணைத் தாக்குதலின் பின்னர், வாகனம் பறப்பதற்குப் பயந்து இரத்மலானை விமான நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் ஸ்ரீலங்கா விமானப் படையினரின் ஹெலிகள், விமானங்கள்.

பாலபட்ட பென்டி, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த, இராணுவத் தளபதி ஜெரி டி. சில்வா, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி. சில்வா ஆகியோர் வடபகுதிக்கு விஜயம் செய்வர் என்றும் அவர்கள் எங்கெங்கே செல்வார்கள்? யார் யாரை சந்திப்பர்? — என்ற, விவரங்களும் அதில் அடங்கியிருக்கின்றன, ஆனால் பயணத் திட்டம் இரகசியமாக இருக்கட்டும் என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பி[illegible]

றது. கடிதத்தை ஏற்றுக் கொண்ட அதிகாரிகள் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள —

அராலித் தாக்குதல் விசாரணைக்காக வந்த அதிகாரிகள் தமது சடலங்களை பார்க்கச் செல்ல —

**புறப்பட்ட அவ்ரோ வீழ்ந்தது**

அந்த அவ்ரோ, அராலியில் காயப்பட்ட — இறந்த — இராணுவத்தினர் சிலரைச் சுமந்தபடி அநுராதபுரத்திற்குப் புறப்படுகிறது.

புறப்பட்டு சில நிமிடங்களில் "விமானத்தின் இயந்திரத்தில் தீப்பிடித்து விட்டது. எனவே பலாலிக்கு திரும்புகிறோம்" — என்றும் பதற்றத்துடன் அறிவிக்கிறார் விமானி.

அநுராதபுரம் நோக்கிப் புறப்பட்ட விமானம் கரும் புகையைக் கக்கியபடி பலாலியை நோக்கி வந்துகொண்டிருக்க —

பலாலி விமான நிலையத்தில் சேதமுற்ற விமானத்தை [illegible]

[illegible]னைப்பு கருவிகளை தயார் செய்து கொண்டிருக்க —

இவையெல்லாம் பிடிக்காமலோ என்னவோ விமானம் ஓடுபாதையை அடைய முன்னரே வீழ்ந்து நொறுங்கிப் போகிறது.

உடனடியாக பயணம் செய்தவர்களை காப்பாற்ற முயற்சி எடுக்கப்படுகிறது. [illegible] அதற்குத் [illegible] அனைவரும் [illegible] தெரியாமல் [illegible] வந்தவரை லாபம் என்ற ரீதியில் நெருப்பை அணைத்து, சடலங்களை வெளியே எடுக்கிறார்கள் படையினர்.

**இரவில் வந்த விமானம்**

அதே நேரம் அராலிச் சம்பவத்தை விசாரிக்க வந்த குழுவினர்களும் ஏனைய அதிகாரிகளும் விமானத்திற்கு என்ன நடந்தது — தாக்குதலா, இயந்திரக் கோளாறா— எனத் தெரியாமல் இரும்புக் குவியலொன்றை வைத்துத் தடுமாறிக்கொண்டிருக்க —

அன்றைய தினம் இரவு [illegible]டு இருட்டாக "வை 12" ரக விமானம் ஒன்று பலாலியில் அவசரமாக தரையிறங்குகிறது!

அதில் விமானப்படையின் உயர்மட்ட அதிகாரிகளான ஏயர்வைஸ் மார்ஷல் டபிள்யூ. தர்மசேன விஜேநாயக்க, குறூப்கப்டன் ஜி. டொனால்ட் பெரேரா, வீ. வை பீ. சில்வா ஆகியோர் வந்திறங்குகின்றனர்.

இவர்கள் வீழ்ந்து நொறுங்கிய அவ்ரோ விமானத்தைப் பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிக்கவென அவசரமாக அனுப்பபட்ட அதிகாரிகள்.

இவர்கள் விமானம் வீழ்ந்த இடத்தை பார்வையிட்டு, வீடியோ எடுத்துவிட்டு, சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கைபற்றி ஆராய்வதற்காக அவசர உயர்மட்ட மாநாடு ஒன்றை பலாலியில் கூட்டுகின்றனர்.

அதில் விமானம் இயந்திர கோளாறினால் தான் விழுந்தது என்பது பற்றி தீவிரமாக விவாதிக்கின்றனர். அதற்கான ஆதாரங்களுடன் புறப்பட்டு வந்த அதே "வை 12" ரக விமானத்தில் ஏறி அவசரமாகக் கொழும்புக்குப் பறக்கின்றனர்.

ஏனைய அதிகாரிகளும் விமானம் இயந்திர கோளாறினால் தான் விழ்ந்தது என்ற உறுதியான முடிவுடன் பாட்மின்ரனும் டேபிள் ரெனிஸும் விளையாடச் சென்று விடுகின்றனர்.

**பெரேராவுக்கு வந்த சந்தேகம்**

ஆனால் குழுவினருடன் வந்தவர்களில் ஒருவரான குறூப் கப்டன் டொனால்ட் பெரேராவுக்கு விமானத்தின் வீழ்ச்சியில் சந்தேகம் ஏற்படுகின்றது. எனவே அவர் கொழும்பு திரும்பும் குழுவினருடன் திரும்பிச் செல்லாமல் பலாலியிலேயே தங்கி விடுகிறார்.

மீண்டும் ஒரு தடவை சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று பார்வையிடுகிறார். அருகிலே இருந்த இராணுவச் சிப்பாய்களிடம் இது பற்றி விசாரணை செய்கிறார்.

இறுதியில் தனது சொந்த அபிப்பிராயமாக "பக்ஸ்" மூலம் செய்தி ஒன்றை கொழும்புக்கு அனுப்பி வைக்கிறார்.

"28 ஆம் திகதி மாலையில் வீழ்ந்த 'அவ்ரோ' ஏவுகணை தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கலாம் என எனக்குச் சந்தேகம் ஏற்படுகிறது" — என்ற அந்த "பக்ஸ்" செய்தி கொழும்பின் உயர்மட்டத்தை கதி கலங்க வைக்கிறது. மறுநாள் பலாலிக்குச் செல்ல இருந்த அதிவிசேட பிரமுகர்களிடம் இச் செய்தி சொல்லப்படுகிறது; அவர்களின் பயணம் ரத்து செய்யப்படுகிறது "பக்ஸ்" செய்தியும் முற்றாக மறைக்கப்படுகிறது. இயந்திரக் கோளாறினால் தான் விமானம் விழுந்தது என அறிக்கை வெளியிடப்படுகிறது; அவசர அவசரமாக விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்படுகிறது.

**அடுத்த அவ்ரோ புறப்படுவதில் தாமதம்**

மறுநாள் காலை விடிந்ததும் மற்றொரு அவ்ரோ பலாலி நோக்கிப் புறப்பட தயாராகியது. முதல் நாள் வீழ்ந்த விமானத்தைப் பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட குழுவினர் அதில் செல்லத் தயாராக இருக்கின்றனர்.

ஆனால் புறப்பட வேண்டிய நேரத்தை தாண்டி 1 மணி நேரமாகியும் விமானம் புறப்படவில்லை. விசாரித்துப் பார்க்க போது விமா

**- இளவேந்தன் -**

னத்தை ஓட்டிச் செல்ல வேண்டிய விமானிகளான சிரேட்ரியந்த அதிகாரம், சஜீவ பதிரன ஆகிய இருவரும விமானத்தை செலுத்த மறுப்பு தெரிவித்துள்ளதாக அறியவருகிறது.

ஆனால் அவர்களை கட்டாயம் செல்ல வேண்டும் என்றும் —

இல்லாவிட்டால் அவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் —

உயர் பீடம் கட்டளையிடுகிறது.

**தயக்கத்துடன் புறப்பட்ட விமானிகள்**

மிகுந்த தயக்கத்தின் பின் விமானத்தை கிளப்பிக் கொண்டு செல்கிறார்கள் விமானிகள். விமானத்தின் பெரும்பாலான இருக்கைகள் வெறுமையாக இருக்கின்றன. அநுராதபுரத்தில் அந்த இருக்கைகளுக்கு உரியவர்கள் ஏறிக் கொள்வார்கள் என சொல்லப்படுகிறது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

24 H. P. இங்கிலன்ட் பேற்றர் டீஸல் எஞ்சின் விற்பனைக்கு உண்டு தொடர்பு: சேகர் குளிர் களஞ்சியம், இல. 273, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (36768)

இந்தியன் வில்லியர்ஸ் நீர் இறைக்கும் இயந்திரம் விற்பனைக்கு உண்டு. சபா விற்பனை நிலையம், இருபாலை. (36783)

திருநெல்வேலி விவசாய பாடசாலைக்கு அண்மையில் சகல வசதிகளையும் கொண்ட புதிய மாடி வீடு விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் பார்வையிடலாம். 159, பலாலி வீதி, கோண்டாவில். [36827]

குசன் கதிரை, டைனிங் ரேபிள், சிறிய கட்டில், சோக்கேஸ், அலுமாரி என்பன விற்பனைக்குண்டு சி நாதன். இல 16/3, விதானையார் வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம் [36825]

## கார் விற்பனைக்கு

Japan தயாரிப்பு Mitsubishi கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளும் முகவரி: 102, ஆடியபாதம் வீதி நல்லூர். நேரம் காலை 10 1 வரை. மாலை 3–6 வரை. (36815)

## காணி விற்பனைக்கு

[illegible] பிரதான சந்தியில் இருந்து காங்கேசன்துறைப் பக்கம் மேற்காக (இலக்கம் 9 பெரிய மாடிக்கடையும் இணைந்த பெரிய பண்டசாலையும் 600 சதுர அடி (நாலுகுளி) உரிமைப்படம் இணைந்து உரிமை கேந்திர ஸ்தானம். தொடர்பு: சுப்பையா தியேட்டர் லேன், இணுவில் (8319)

## வீடு விற்பனைக்கு

2½ பரப்புக் காணியில் அமைந்துள்ள, அடக்கமான, சகல வசதியும் கொண்ட வீடொன்று விற்பனைக்குண்டு. காங்கேசன்துறை வீதியில் மின்கொவத் அருகே அரசடி ஒழுங்கையில் அமைந்துள்ளது தொடர்பு: 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-1270)

## வாங்கலாம் விற்கலாம்

நாஷனல் RX ரேடியோ செற் செற்கள் 12'', 14'' கறுப்பு வெள்ளை தொலைக்காட்சிகள் நியாய விலையில் வாங்கவும் விற்கவும் எம்மிடம் தொடர்பு கொள்ளுங்கள்! விஸ் டிக்கா வாசிஅன் ரேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [வானவில் கூல்பார் அருகில் ஆரியகுளம் சந்தி]

(சி-1410)

## தேவை

இயங்கக்கூடிய நிலையில் உள்ள வெதுப்பகம் ஒன்றும், தேநீர்சாலை நடத்துவதற்குரிய கடை ஒன்றும் தேவைப்படுகின்றது ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்படும். யாழ் மாநகரசபை எல்லைக்குள் இருப்பது விரும்பத்தக்கது. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: ந தவசீலன், பி எஸ் சேகின் நிலையம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் [36814]

## மணப்பெண்கள் தேவை

குற்றமற்ற 30 வயது கனடா Draftsman க்கு கனடாவிலுள்ள பெண்ணும், 37 வயது நோர்வேக்கு வெளிநாட்டுப் பெண்ணும். 35 வயது கத்தோலிக்கருக்கு வெளிநாட்டுப் பெண்ணும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம் [36823]

கத்தோலிக்க 38 வயது பட்டதாரியாகப் படிக்கிற வருக்கும், செவ்வாய்க்குற்ற மற்ற 36 வயது கிராமசேவகருக்கும், 32 வயது M B Bsக்கும் 28 வயது பட்டதாரி ஆசிரியருக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். [36824]

இந்து செவ்வாயகுற்ற மற்ற, கொழும்பில் வேலை செய்யும் 33 வயது M B Bsக்கு கொழும்பிலுள்ள M B Bs, Dental, பட்டதாரி தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். [36822]

## ஆண்டு 5 புலமைப்பரிசில்

அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட புதிய பாடத்திட்ட மாதிரி பயிற்சி வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். தொகையாகப் பெற விரும்புபவர்களுக்கு 25% கழிவுண்டு. Bond, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [8558]

ஆண்டு 5 புலமைப்பரிசில் 95 பரீட்சைக்காக புதிய பாடத்திட்டப்படி பயிற்சி வினாத்தாள்கள் (விடைகளுடன்) ஒவ்வொரு மாதத்தின் 2ஆவது 4ஆவது ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியிடப்படுகின்றன. அடுத்த வெளியீடு: 28-5-95 பயிற்சி வினாத்தாள்களையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். Bond, 58A, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். [8559]

## பயிற்சி வினாத்தாள்கள்

ஆண்டு 3, 4, 5, 6, 7, 8, 9, 10, O/L வகுப்புகளுக்காக ஒவ்வொரு மாதமும் பயிற்சி வினாத்தாள்கள் [விடைகளுடன்] எம்மால் வெளியிடப்படுகின்றன. மே மாதத்திற்கான பயிற்சி வினாத்தாள்கள் 27-5-95 சனி முதல் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். Bond, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [8557]

## மணமக்கள் தேவையா?

எம்மிடம் பல ரகசியங்களும், அத்துடன் சைவ போசனத்தை விரும்புவோர், மாற்றுச் சம்பந்தத்தை விரும்புவோர், கத்தோலிக்கர் இருக்கிறார்கள் மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம். [36821]

## கல்வி

சாவகச்சேரியில் G.C.E (O/L) 1995 — கணிதம், விஞ்ஞானம் பயிற்றப்பட்ட ஆசிரியரால் வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும். தொடர்பு கொள்ளவும். மே/பா உதயன், வி. இல. 795, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [36788]

## O/L கணிதம் - 95

விசேடமாக Distinction' Credit பெறுபேறுடைய வினா - விடை மூலமும் ஆரம்பத்திலிருந்து B Sc. ஆசிரியரால் கற்பிக்கப்படும். இல. 85, சிவன்கோயிலடி [சிவன் கோயில் மேற்கு வீதி], திருநெல்வேலி. [36799]

## மணப்பெண் தேவை

இந்து. மூல நட்சத்திரம், செவ்வாய்க்குற்றமற்ற, 30 வயது. B. Sc. பட்டதாரி, தற்பொழுது கனடாவில் குடியுரிமை பெற்று தொழில்புரியும் மணமகனுக்கு, அழகான படித்த நற்குணமுள்ள மணப்பெண்ணை பெற்றோர் தேடுகின்றனர். சாதக குறிப்பு மற்றும் முழுவிவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்: இல 794, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [36761]

## வெளிவந்துவிட்டது

கும்பகர்ணன் வதைப்படலம் பல்கலைக்கழக வெளிவாரி முகாமைத் தேர்வுக்கும் G A Q. பாலபண்டித மாணவருக்கும் ஏற்றது. 5ஆம் ஆண்டு ஆரம்ப பொது அறிவு (தொகுப்பு சி பொன்னம்பலம்) மகமிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம். ஸ்ரீ காந்த புத்தகசாலை, நல்லூர். (சி-1374)

---

# 31 ஆம் நாள் நினைவுப் பூக்கள்

மலர்வு: 05-11-1927 நிறைவு: 28-04-1995

அமரர்

## வல்லிபுரம் முத்துக்குமாரசுவாமி

(ஓய்வுபெற்ற தபால் அதிகாரி)

''மறைவுகள் யாவும் காலத்தின் கட்டளை''

இவர் இறையடி சேர்ந்து 31 ஆம் நாளாகிய இன்று இவரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு எங்கள் சக ஆசிரியை செல்வி கௌரி முத்துக்குமாரசுவாமி அவர்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் தேறுதல் கூறுகின்றோம்.

அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/ கைதடி விக்னேஸ்வர வித்தியாலயம், கைதடி.

[36790]

---

# விண்ணக வாழ்வின் 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி
**மறினா சாந்தினி சவுந்தராஜ்**
(வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் பாலர் பாடசாலை ஆசிரியை)
மலர்வு: 21 – 11 – 1963



செல்வன்
**சாள்ஸ் றொசான் சவுந்தரராஜ்**
(யாழ் / தொழில் நுட்ப கல்லூரி மாணவன்)
மலர்வு: 25 – 05 – 1969

அழிப்பு: 28 – 05 – 1992

''ஆண்டுகள் மூன்று ஓடி மறைந்தாலும் என்றும் - உங்கள் நினைவுகளோடு வாழும் அன்பு நெஞ்சங்கள்''

இவர்களின் ஆத்மசாந்திக்காக இன்று (28 - 05 - 1995 ஞாயிற்றுக்கிழமை காலை 8–15 மணிக்கு வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

என்றும் உங்கள் நினைவில் வாழும்:
பெற்றோர், சகோதரர்கள்.

திருவில் ஒழுங்கை, வல்வெட்டித்துறை.

[8561]

---

# தாதியர் பயிற்சி நெறி

## DIPLOMA IN NURSING

10 – 6 – 95 ல் ஆரம்பமாகின்றது

1. தமிழீழத்தின் தனியார் துறை தாதியப்பயிற்சியின் ஆரம்ப கர்த்தாவும், வேலூர் தாதியப் பயிற்சியில் 30 வருட கால அனுபவம் உடையவரும், தாதியர் போதனாசிரியராக 12 வருட கால அனுபவம் உள்ளவருமான கலாநிதி V P சுந்தரராஜன் அவர்களால் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.
2. கல்வித் தகைமை:- க. பொ. த (சாதாரணம்).
3. விசேட மருந்தியல் பாடம் உட்பட, குழந்தைப் பராமரிப்பு, மருத்துவ உளவியல், குழந்தை உளவியல் ஆகிய பாடங்களும் உள்ளடக்கப்பட்டன.
4. நகரின் பிரபல வைத்தியசாலையில் இரண்டு மாத கால செய்முறைப் பயிற்சிகள்.
5. போராளிகள், மாவீரர் குடும்பத்தவர்களுக்கு இலவச கல்வி.

விவரங்களுக்கு:-


## சாயி மருத்துவக் கல்லூரி

இல: 10, இல 6, பருத்தித்துறை வீதி,
யாழ் நகர் — தமிழீழம்.

(சி- 1389)

---

# ஓராண்டு நினைவஞ்சலி



**அமரர், ந. கனகேஸ்வரன்**
மல்லாகம்
(இளைப்பாறிய அதிபர், பலாலி ஆசிரியர் கலாசாலை)

தோற்றம்: 18 – 12 – 1929
மறைவு: 28 – 05 – 1994

நீங்காத நினைவுகளுடன்;
மனைவி.

மல்லாகம். (8410)

---

# 31 ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு: 05 – 11 – 1927



நிறைவு: 28 – 04 – 1995

அமரர்

## வல்லிபுரம் முத்துக்குமாரசுவாமி

எங்கள் குடும்பத் தெய்வமாய், தலைவனாய், வழிகாட்டியாய் விளங்கி அன்பு, பாசம், பண்பு கல்வி, தெய்வபக்தி தந்து எங்களை வளர்த்த அன்பு அப்பாவே!

உங்கள் பிரிவைத் தாங்காது அம்மாவும், உங்கள் அன்புச் செல்வங்கள் நால்வரும் துடிக்கின்றோம் அப்பா. மீண்டும் எங்கள் குடும்பத்தில் குழந்தையாக உதித்து எங்களுக்கு ஆறுதல் தாருங்கள்.

அவையத்து முந்தி இருக்க வைத்த எங்கள் அப்பாவின் ஆத்மா சாந்தி பெற்று இறையடி நிழலில் நிறைவு எய்தப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

''மணிபல்லவம்''
கைதடி தெற்கு,
கைதடி.

[36888]

---

# 'அவ்ரோ' விமானங்கள்...,

[3 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அநுராதபுரம் விமான நிலையத்தில் விமானம் இறக்கப்படுகிறது. படையினருக்குத் தேவையான பத்திரிகைகள், மரக்கறிகள், போன்ற பொருள்கள் ஏற்றப்படுகின்றன. ஆனால் எவரும் ஏறுவதற்கான சாத்தியக் கூறுகள் அங்கே காணப்படவில்லை.

இதனை அடுத்து சிரேஷ்ட பிரயாண அதிகாரம் என்ற விமானி எதுவந்த போதிலும் தாம் பலாலிக்குச் செல்ல முடியாது எனக் கூறி விட்டு, விமானத்தை விட்டு இறங்கிச் செல்ல...

விசாரணைக் குழுவில் இருந்த விங் கொமாண்டர் ஸ்ரீரத்ன குணதிலக விமானத்தை ஓட்ட முன் வருகிறார்.

விமானம் பலாலி நோக்கிப் புறப்படுகிறது. குடா நாட்டு எல்லைக்குள் நுழைந்த சில நொடிகளில் ஏவுகணையை ஏற்றுக் கொண்டு இழுத்துப் பறித்து சென்ற இனியும் இயலாது என்ற நிலையில் குட்டிக்கரணம் போட்டு விட்டு நவக்கிரியில் வீழ்ந்து... வெடித்து... எரிந்து... நவலாகி... புகைந்து... அணைந்து போகிறது.

★ ★ ★

### சில கேள்விகள்

இதுமுன்னர் நடந்த கதை. ஆனால் இப்பொழுது உருவாகியிருக்கும் பிரச்சினை இதனை சார்ந்ததாகவே உள்ளது

★ டொனல்ட் பெரேரா விகடகஸ் செய்தி ஏன் மறைக்கப்பட்டது?

★ தங்கள் பயணத்தை ரத்துச் செய்த அதி முக்கிய பிரமுகர்கள் ஏனையவர்களை பயணம் செய்ய அனுமதித்தது ஏன்?

★ புலிகள் விமான எதிர்ப்பு ஏவுகணையை உண்மையில் பாவிக்கின்றார்களா எனப் பரிசோதனை செய்து பார்க்கத்தான் இரண்டாவது ''அவ்ரோ'' அனுப்பப்பட்டதா?

★ அப்படியென்றால் அதில் பயணம் செய்த அனைவரும் பலிக்கடா ஆக்கப்பட்டார்களா?

— போன்ற விடயங்கள் தான் தற்பொழுது சர்ச்சையைக் கிளப்பியுள்ள விடயங்கள்

இந்த உண்மைகளை மறைப்பதற்காக முழுப் பூசணிக்காயை சோற்றிலே மறைப்பது போல், முதல் விமானம் இயந்திரக் கோளாறினால் தான் விழ்ந்தது; இரண்டாவது தான் ஏவுகணைத் தாக்குதல்களுக்கு உள்ளானது என்று அழுத்தி அழுத்திச் சொல்லி வருகிறது பாதுகாப்பு அமைச்சு.

இந்த சம்பவங்களினால் வெறுப்புற்று பல விமானப்படை விமானிகள் லீவிலே சென்று விட்டனர். மேலும் பலர் விமானங்களைச் செலுத்த மறுப்புத் தெரிவித்து விட்டனர்

இவர்களை வழிக்குக் கொண்டு வர சாம, பேத, தான, தண்ட வழிமுறைகளை எல்லாம் செய்து பார்த்து விட்டது உயர் மட்டமும் அரசும்.

ஆனால் தங்களை இராணுவ நீதிமன்றத்தில் நிறுத்தினால்கூட அச்சமில்லை என்று உறுதியுடன் இருக்கிறார்கள் விமானிகள்;

தற்போது விமானப் படையிடம் உள்ள ஒன்பது சுப்பர் சொனிக் விமானங்களில் நான்கு மட்டுமே சேவைக்கான விமான நிலையத்தில் தரித்து நின்றவாறு செயற்பட்டு வருகின்றது. கண்ணிமைக்கும் நேரத்தில் வந்து உயரத்திலிருந்து குண்டு போட்டு விட்டு ஓடி மறைந்து விடுகின்றன இந்த விமானங்கள்.

இவற்றைவிட பலாலிக்கு கடந்த ஒரு மாதத்தில் இரு தடவைகள் மட்டுமே விமான சேவைகள் நடைபெற்றிருக்கின்றன.

ஏப்ரல் 28 ஆம் 29 ஆம் திகதிகளில் முந்து நொறுங்கிய விமானங்களில் இருந்து மீட்கப்பட்ட சடலங்களின் எரிக்கப்பட்ட அஸ்தியை எடுத்துச் செல்ல வந்த வை 12 ரக விமானமொன்று கடற்படைப் பாதுகாப்புடன் கடலுக்கு மேலாக வந்து பலாலியில் இறங்கிச் சென்றது

இந்த விமானம் தரையிறங்கிச் செல்ல செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழு மூலம் அரசு விடுதலைப் புலிகளிடம் அனுமதி பெற்றிருந்ததாகச் சொல்லப்படுகிறது.

அதன்பின் கடந்த 16 ஆம் திகதி ஒரு ''வை 12'' ரக விமானம் அதே பாதுகாப்புகளுடன் அதே பாதையால் வந்து முக்கிய மருந்துகள் மற்றும் கடிதங்களை கொடுத்து விட்டு காயப்பட்ட மூன்று இராணுவத்தினருடன் 12 படையினரை ஏற்றிக் கொண்டு சென்றதாக அரசாங்கம் அறிவிக்கிறது.

ஆனால் இந்த பயணத்தின் பாதுகாப்புக்காக கடற்படையும், தரைப்படையும் செலவழித்த தொகை பல லட்சங்களைத் தாண்டும் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

எனவே வடபகுதியில் எந்த முனையாலும் பழைய சுதந்திரத்துடன் விமானங்கள் நுழைய முடியாத நிலையுள்ளது மட்டுமல்லாது, கிழக்கிலும், தெற்கிலும் கூட விமானங்கள், ஹெலிகள் பறக்க முடியாத, இயலாத நிலை எழுந்துள்ளது.

இதனால் படையினர் பருப்பும், சோயா இறைச்சியும், நெத்தலிக்கருவாடும் உண்ண வேண்டிய நிலையில்— பத்திரிகை, கடிதங்கள் இன்றி— தென்பகுதித் தொடர்புகளை இழந்து அவஸ்தைப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

### அரசின் அறிவிப்பும் படையினர் அதிருப்தியும்

ஆனால் வழமையான விமானச் சேவைகள் நடைபெறுகின்றன என்றும் சகல வசதிகளும் முன்னர் போல் கிடைக்கின்றன என்றும் அரச தொடர்பு சாதனங்கள் அறிவித்துக் கொண்டு இருக்கின்றன.

இந்த அறிவிப்புக்களினால் முகாம்களில் முடங்கியுள்ள படையினர் மத்தியிலும் சலசலப்பு ஏற்பட்டுள்ளது

ஆயினும் எதுவும் செய்ய முடியாத நிலையில் உள்ளுக்குள்ளேயே குமுறிக் கொண்டிருக்கின்றனர் முகாம்களில் உள்ள படையினர்.

மீண்டும் பழைய நிலை தோன்றுமா என்பது தான் அவர்களின் முழு ஆதங்கமாக உள்ளது.

முன்னரைப்போல மணிக்கொரு விமானமும், நிமிடத்திற்கொரு ஹெலியும் பறக்க வேண்டும். அடிப்படியானால் தான் பச்சைக் காய்கறிகளுடன் சோறு உண்ண முடியும் பத்திரிகைகளை படிக்க முடியும்; வீட்டுக் கடிதங்களை, வாசிக்க முடியும்— இது அந்தப் படையினரின் எதிர்பார்ப்பு.

ஆனால் அதற்கு விடுதலைப் புலிகளிடமுள்ள விமான எதிர்ப்பு ஏவுகணைகளை முறியடிக்கக்கூடிய எதிர்ப்பு ஏவுகணைகள் தேவை. அவை கிடைக்குமா? எப்பொழுது கிடைக்கும்? அப்படிக் கிடைத்தாலும் வடபகுதிக்குள் வரும்—செல்லும்—அனைத்து விமானங்கள் ஹெலிகளும் அவை பொருத்தப்பட வேண்டும்; அல்லது அவை பறக்கும் போது எந்நேரமும் எதிர்ப்பு ஏவுகணை பொருத்தப்பட்ட விமானம் ஒன்றும் பாதுகாப்பாய் பறக்க வேண்டும். மணிக்கு ஒன்றாக— நிமிடத்திற்கு ஒன்றாக— வந்து போகும் ஹெலிகள், விமானங்களுக்கு இது சாத்தியப்படுமா என்பதே படையினரின் கேள்வியாக இருக்க..

விடுதலைப்புலிகளிடமுள்ளது. ஸ்றிங்கரா, சாம்-7 வகையா, புளோப்பா என்று தெரியாத நிலையில் அதற்கு வாங்கப்போகும் ஏவுகணைகள் விடுதலைப் புலிகளிடம் உள்ள ஏவுகணைகளுக்கு எதிர்ப்பாக அமையுமா? அதனை நூறுவீதம் நம்பி வான் பயணம் செய்ய முடியுமா? ஏற்கனவே நடந்தது போன்ற சம்பவங்கள் மீண்டும் நடைபெறாது என்பதற்கு என்ன உத்தரவாதம்? —போன்ற கேள்விகள் விமானப்படையினரின் மத்தியில் எழுந்துள்ளது.

அரசு மிக்' வாங்குவோமா, ''மிஸைல்'' வாங்குவோமா என திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறது

ஆனால் எது வாங்கினாலும் விமானப்படையினர் ஒத்துழைப்பார்களா என்பது தான் இப்போது முக்கியமான பிரச்சினையாக உள்ளது

தற்போது கடமையில் உள்ள விமானிகளில் நம்பிக்கையின்றி புதிதாகத் தெஸ்டர் விமானிகளைப் பணிக்கமர்த்த விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக பின்னர் வந்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இவைகளும் முன்னர் வந்த செய்திகளை ஊர்ஜிதம் செய்பவையாக அமைந்துள்ளன.

வெறிச்சோடிப்போன வானம்: வெறுமையாகி விட்ட கடல்: உணவுக்கும், உறவினரின் கடிதத்திற்கும், விமானத்தையும், கப்பலையும் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட படையினர். ஆனால் அரசாங்கமோ ''டேக் இட் ஈஸி பொலிஸியில்'';

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## சூடு கண்ட பூனை

"சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது" – இது பழமொழி.

சூடுகண்ட பூனை அடுப்பங்கரை நாடக்கூடாது என்பது அப்பழமொழியில் இருந்து புரியும் படிப்பினை—

இந்தப் பாடத்தைத்தான் இந்திய மத்திய அரசுக்குப் போதித்திருக்கிறது பாரதிய ஜனதாக்கட்சி.

"இலங்கையின் இனப் போரில் தலையிடுவது இந்தியாவுக்கு ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தும்"—என அக்கட்சி மத்திய அரசுக்கு விடுத்திருக்கும் எச்சரிக்கை இத்தகைய ஒரு போதனையே.

இத்தகைய ஓர் எச்சரிக்கை உணர்வின்றி—

இந்தப் பிராந்தியத்தின் வல்லரசாக தன்னை நினைத்துக்கொண்டு—

1987இலே ஈழத் தமிழரின் பிரச்சினையில் சட்டாம்பிள்ளைத் தனத்துடன் தலையிட்டதற்கு சரியான சூட்டை வாங்கிக்கட்டிக் கொண்டது இந்தியா.

தென்கிழக்காசிய நாடுகளில் — "சார்க்" உறுப்பு தேசங்களின் மீது— ஏதோ ஒருவகையில் தனதுபிராந்திய வல்லரசுத்தனத்தை திணித்துக்கொண்டு வந்திருக்கிறது இந்தியா.

இப்பிரதேசத்தில் தனக்கு அடுத்த பெரிய நாடான பாகிஸ்தானில் நேரடியாகத் தலையிட்டு, இராணுவத்தை அனுப்பி, அதனை பாகிஸ்தான் – வங்காளதேசம் என இரு நாடுகளாகத் துண்டாக்கியதன் மூலம் அந்த இருநாடுகளின் மீதும்—தனது வல்லரசு தனத்தை வெளிப்படுத்தியது இந்தியா—

பூட்டான் மீதும் அதன் கெடுபிடிகள் இப்போது உள்ளன.

நேபாளத்தின் உள் விவகாரத்தில் இந்தியா ஊடுருவியதும் தனக்கு அடங்கிவராத மன்னர் பிரேந்திராவின் ஆட்சியைக் கவிழ்த்ததும், அங்கு கம்யூனிஸ்ட்டுகள் ஆட்சி பீடம் ஏற இந்தியாவின் தவலயீடும் குளறுபடிகளும் காரணமானதும் தெரிந்தவையே.

இந்தியாவில் பயிற்சி பெற்ற "புளொட்" குழுவினரும், அவர்களால் இந்தியாவுக்குக் கூட்டிச்செல்லப்பட்டு, அங்கு வைத்து ஆயுதப் பயிற்சி வழங்கப்பட்ட சிங்களத் தீவிரவாதிகளும் ஒன்று சேர்ந்து மாலைதீவைக் கைப்பற்ற முயன்றதும்—

இந்தியப்படை மாலைதீவு விரைந்து ஜனாதிபதி கையூம் தலைமையிலான அரசைக் காப்பாற்ற ஆபத்பாந்தவர்களாக செயற்பட்டதும்—

அதன் மூலம் மாலைதீவின் மீதும் தனது இராணுவ வல்லாதிக்க மேலாண்மையை இந்தியா பதிய வைத்துக் கொண்டதும் கடந்த காலச் சரித்திரங்கள்.

ஏனைய ஐந்து "சார்க்" நாடுகளிலும் நிலை நாட்டிய தனது இராணுவ மேலாதிக்கத்தை எஞ்சியுள்ள ஆறாவது "சார்க்" நாடாகிய ஸ்ரீலங்காவிலும் பிரயோகிக்க இந்தியா தவறவில்லை.

தமிழ்ப் போராளிகளை ஊக்குவித்து, வளர்த்ததன் மூலம் தனது இராணுவ மேலாண்மைக்கு முன்னால் சிங்கள ஸ்ரீலங்கா அரசை மண்டியிட வைத்தது இந்தியா அதன் வெளிப்பாடே ராஜீவ்—ஜே. ஆர். ஒப்பந்தம்.

ஏனைய ஆறு சார்க் நாடுகள் மீதுதனது 'பந்தாவை' பிரயோகித்த இந்தியாவிற்கு அதன் மேலாண்மையை தமிழீழ மக்கள் மீது செலுத்த முடியாமற் போயிற்று.

இந்தியாவின் சட்டாம்பிள்ளைத் தனத்துக்கு சரியான சூடு கொடுத்து அனுப்பினார்கள் புலிகள்.

பெரும் ஆர்ப்பாட்டத்துடன்— தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்கும் எண்ணத்துடன்— வந்த இந்திய அமைதி காக்கும் படை, விடுதலைப் புலிகளின் இராணுவத் திடத்துக்கும், இராஜதந்திரத் திறமைக்கும் ஈடுகொடுக்க முடியாமல் வெறுங்கையோடு தனது தாயகம் திரும்ப வேண்டியதாயிற்று.

இந்தச் 'சூடு' பாரதிய ஜனதாக் கட்சிக்கு நன்கு உறைத்திருக்கிறது. நரசிம்மராவ் அரசுக்கு பாரதிய ஜனதாக்கட்சி மேற்படி எச்சரிக்கையைக் கொடுக்க இது தான் காரணம் எனலாம்.

# தமிழ் மக்கள் அபிலாசையை புறக்கணிக்கும் தீர்வை திணிக்கவே போர் மூலம் சமாதானம் என்ற கோஷம்

## தெற்கில் போருக்கான முரசம்; அரசின் பின்னால் அணிதிரள்வு

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கடந்த திங்கட்கிழமையன்று — ஸ்ரீலங்காவின் தேசிய வீரர் நாளன்று— நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை, வடக்கு — கிழக்கில் உக்கிரமான போர் ஒன்றை நடத்துவதற்குக் கட்டியம் கூறுவதாக இருந்தது.

சமாதானத்தைக் காண்பதற்கு தாம் எடுத்த முயற்சிக்கு விடுதலைப்புலிகள் முட்டுக்கட்டை போட்டு நிறுத்திவிட்டார்கள்; அதனால் அரசாங்கத்தின் மீது போர் திணிக்கப் பட்டிருக்கிறது; என்ற ஒரு பொய் வடிவமான சித்திரத்தை வெளி உலகத்துக்குக் காட்டுவதாகவும் அது இருந்தது.

தொடங்கியிருக்கும் போரில் இராணுவத்தினர் மனம் தளராது சண்டையிடுவதற்கு, அவர்களுக்குத் தென்பும், உற்சாகமும், ஊக்கமும் அளிக்கும் விதத்தில் ஜனாதிபதியின் உரை அமைந்தது.

இராணுவம் போரில் வெல்வதற்குத் தேவையான சகல வசதிகளும் எவ்வளவு செலவிலேனும் செய்து தரப்படும் என்றும் சந்திரிகா படையினருக்கு உஷார் கொடுத்துள்ளார். அது மட்டுமன்றி போரில் வெல்லும் திறமை

### கடற்புலிகளை பலவீனமாக்கும் நோக்குடன் வல்வை, பருத்தித்துறையை பிடிக்க இலக்கு

யும் பலமும் அரச படைகளுக்கு உண்டு என்றும் கூறி அவர் தட்டிக்கொடுத்துள்ளார்!

சந்திரிகாவின் உரையைத் தொடர்ந்து கொழும்புப் பத்திரிகைகள் பலவும், அரசின் போர் நடவடிக்கைக்குச் சகல மக்களும் கை கொடுத்து ஆதரவு வழங்கவேண்டும் என்று சிங்கள மக்களுக்கு அறை கூவல் விடுத்துள்ளன.

அரசாங்கப் படைகள் தமிழர் பகுதியில் நடத்தப் போகும் போர், தமிழர்களை இன அழிப்புச் செய்வதற்கான போர் என்பது வெளிப்படையானது. விடுதலைப் புலிகளைத் தாக்குவதாக அல்லது நசுக்குவதாகக் கூறி தமிழர்களைப் படுகொலை செய்யும் போர் என்பது கடந்த பன்னிரண்டு வருடகால நடைமுறை அனுபவம்.

கிழக்கில் கடந்த இருவாரங்களில் நடந்த சம்பவங்கள், போர் என்பது தமிழர் இனப் படுகொலையே என்பதைச் சான்றுபடுத்தும் முன்னோடிகளாக உள்ளன. குறிப்பாக மட்டக்களப்பு இருதயபுரம், ஜெயந்திபுரம் பகுதிகளில் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டதும், பொத்துவில்இன்ஸ்பெக்டர் ஏத்தம் பகுதியில் தமிழர்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதும் இதனை அத்தாட்சிப்படுத்துகின்றன.

**போரும் சமாதானமும்**

இத்தகைய ஒரு போருக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் சந்திரிகா —

தமது மே 22 ஆம் திகதி உரையில்—

சமாதானத்தை சமாதான வழியில் அடைய முடியாவிட்டால், வேறு எந்த வழி மூலமேனும் சமாதானத்தை அரியாசனம் ஏற்றும் பொறுப்பிலிருந்து நழுவிவிடமாட்டோம்— என்றும் தெரித்திருக்கின்றார்.

சந்திரிகா கூறும் வேறு வழிமுறை போர் வழிமுறையே என்பதை எந்தச் சிறுபிள்ளையும்அறியும்.

அந்தப் போரை நடத்துவதற்கான, வெல்வதற்கான சகல ஏற்பாடுகளையும் சந்திரிகா அரசு மேற்கொண்டு வருகிறது. படை அணிகள் தொண்டர் படைகள் திரட்டப்படுகின்றன. நவீன ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதில் பம்பரமாகச் சுற்றி அலுவல்கள் நடக்கின்றன. வெளிநாட்டு உதவிகளும் கோரப்பட்டுள்ளன. அது கிடைக்கும் என்றும் தகவல் வெளியிடப்பட்டிருக்கின்றது.

இத்தனையும் விடுதலை புலிகளைப் பலவீனப்படுத்தி இராணுவ நிலையில் மேலோங்கி நின்று ஒருதீர்வை திணித்துச் சமாதானத்தைக் கண்டுவிட்டதாகப் பறைசாற்றுவதற்கேயாம்.

இராணுவ நிலையில் மேலோங்கி நின்றே தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்று சிங்கள- பௌத்த பேரினவாதம் அரசாங்கத்துக்கு இடித்துரைத்து வருகிறது.

திம்புப் பேச்சுவார்த்தையின் போது முன்வைக்கப்பட்ட நான்கு அடிப்படைக் கோரிக்கைகளில் முதல் மூன்றையும் செல்லுபடியற்றதாக்கும் விதத்திலேயே, தமிழர் பிரச்சினைக்கான எந்தத் தீர்வும் அமைய வேண்டும் என்று அந்த வட்டாரங்களைச் சேர்ந்தவர்கள் நீண்டகாலமாக அரசுகளுக்கு அடிக்கடி வலியுறுத்தி வருகிறார்கள்.

**தமிழ் மாநாட்டு கோரிக்கைகள்**

★ ஈழத் தமிழர்கள் ஒரு தனித்தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

★ வடக்கு-கிழக்கு தமிழர்களின் பாரம்பரிய தாயகமாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

★ தமிழர்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும்.

★ தமிழர்கள் யாவருக்கும் பிரசா உரிமை வழங்கப்பட வேண்டும்.

திம்பு பேச்சுவார்த்தையின் போது முன்வைக்கப்பட்ட நான்கு அடிப்படைக் கோரிக்கைகள் இவையே.

திம்புப் பேச்சுவார்த்தை இடம் பெற்று பத்து வருடங்களாகிய போதிலும், மலையகத் தமிழர்களில் ஒரு தொகுதியினருக்கு மட்டும் பிரசா உரிமை வழங்கப்பட்டிருக்கிறது ஏனையவை குறித்து ஏறெடுத்தும் பார்க்கப்படவில்லை.

முதல் மூன்று அம்சங்களையும் அழித்துவிடும் வகையிலேயே தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பது சிங்களப் பேரினவாதிகளின் நிலைப்பாடாகும்

ஏனைய தமிழ்க் கட்சிகள் எல்லாம் இந்த மூன்று அடிப்படை அம்சங்களையும் மறந்துவிட்ட போதிலும், விடுதலைப் புலிகள் இவற்றை உள்ளடக்காத ஒரு தீர்வை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பது பேரினவாதிகளுக்குத் தெரியும்.

அதனாலேயே அவர்களை நசுக்கி, பலவீனமடையச் செய்து அரசாங்கம் இராணுவ நிலையில் மேலோங்கி

**அரசியல்**

நிற்கும் போது, சமாதானம் என்ற பெயரில் ஒரு தீர்வைத் திணிக்க வேண்டும் என்று தெற்கில் பதவிக்கு வரும் அரசுகளுக்கு பேரினவாதிகள் ஆலோசனை கூறி வருகின்றனர்.

இந்த ஆலோசனையை முந்திய தலைவர்களைப் போலவே சந்திரிகாவும் ஏற்றுக் கொண்டு செயற்படுகிறார். அதனை வெளியில் காட்டிக் கொள்ளாமல், இந்திய மாநிலங்களைவிடக் கூடுதலான அதிகாரப் பரவல், சுவிஸ் நாட்டுக் கன்ரன்முறை என்று வெளியில் இனிப்புப் பூசிக் காட்டுகிறார்.

எனவே தமிழர் பிரச்சினையில் சமாதானத் தீர்வு காண்பது என்ற தென்னிலங்கை அரசியல் தலைவர்களின் வாய்ப்பாடின் அர்த்தம், தமிழர்களின் அரசியல் அபிலாசைகளைப் புறக்கணித்த ஒரு

### வடக்கில் மக்களை எமது கட்டுப்பாட்டில் கொண்டுவராவிடில் வெல்ல முடியாது-ராணுவ அதிகாரி

தீர்வேயாகும். அதனாலேயே அந்த அபிலாசைகளின் கூட்டுமொத்தச் சின்னமாக விளங்கும் விடுதலைப் புலிகளை நசுக்குவதற்கு கடந்த 12 வருடங்களாகப் படாதபாடு படுகிறார்கள்!

தங்களுக்கென ஒரு தனி நாடும் தனி அரசும் வேண்டும் என்று தமிழர்கள் 1977 ஆம் ஆண்டிலேயே தமது வாக்குகள் மூலம் பிரசித்தப்படுத்தி இருந்தனர். அந்த மூல முடிவில் இருந்து பிறந்தவையே அல்லது அந்தத் தீர்மானத்தின் சாயலே திம்புப் பேச்சுவார்த்தையின் போது முன்வைக்கப்பட்ட நான்கம்சத் திட்டம் அல்லது கோரிக்கை.

முதல் மூன்று கோரிக்கைகளும் வழங்கப்பட்டு விட்டால், தமிழீழத்திற்கான முதற்படி என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் இத்தனை வருட காலப் போராட்டம், உயிரிழப்புகள், உடைமை நாசங்கள், தியாகங்கள், வாழ்க்கைப் பின்னடைவுகள், சோதனைகளின் பின்னரும் அதற்குக் குறைந்த ஒன்றைத் தமிழர்கள் ஏற்க முடியுமா? ஏற்க இயலுமா? என்பதனை ஒவ்வொரு தமிழனும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நாமும் எமது பெற்றோர்களும் அனுபவித்த இன்னல்களையும், இடர்களையும் எதிர்கொண்ட அவமானங்களையும், புறக்கணிப்புகளையும் எமது பிள்ளைகளும் — அடுத்த சந்ததியும் — அனுபவிக்க வேண்டுமா, எதிர்கொள்ள வேண்டுமா என்பதனை ஆற அமர, ஆழ அடி மனதில் எழுப்பிப் பார்க்க வேண்டும்.

தமிழர்கள் விடுதலை பெறத் தகுதியற்றவர்களா? தமக்கென ஒரு நாடு அவர்களுக்கு இருக்கக் கூடாதா? அவர்கள் தம்மைத் தாமே ஆளக் கூடாதா? அதற்குத் தகுதி இல்லாதவர்களா?

எங்கள் மூதாதையர்கள் தம்மைத் தாமே ஆண்டு தமது அலுவல்களைக் கவனித்து வளமாக வாழவில்லையா? இப்போதுள்ளது போலவே அந்நிய இனம் ஒன்றின் ஆட்சியில் இரண்டாந்தரப் பிரஜைகளாகவே எப்போதும் வாழ வேண்டுமா? — இத்தகைய கேள்விகளை ஒவ்வொரு தமிழனும் தனது மனதில் எழுப்பி இறுதி முடிவு எடுக்க வேண்டிய காலம் வந்து விட்டது.

சந்திரிகா அரசாங்கம் சிங்கள மக்களின் பிரதிநிதி. அது விடுதலைப் புலிகளுக்கு எதிராகவே போர் என்று கூறித் தமிழர்களுக்கு எதிராகவே போர் முரசம் கொட்டுகிறது. சிங்களவர்கள் தமது அரசின் கீழ் அணி திரளத் தொடங்கிவிட்டார்கள் என்றே கொள்ள வேண்டும். அதற்கான பிரசாரங்கள் தெற்கே தீவிரமாக நடக்கின்றன.

எனவே தமிழர்களும் தமது விடுதலைக்காக அணி திரள வேண்டிய அவசர தேவை உருவாகியிருப்பதை தமிழர்கள் உரைவேண்டும்.

★ ★ ★

**கிழக்கில் புலிகள்**

பிந்திய செய்திகளின் படி, அரசு— இராணுவம்— திட்டமிட்டுள்ள உக்கிரப் போர் தொடங்குவதற்கு இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதங்கள் செல்லலாம். வெளிநாட்டு உதவியுடனான பெரும் போர் அப்போது தான் ஆரம்பமாகும். மழை காலம் தொடங்குவதற்கு முன்னர் அந்தப் பெரிய போரைத் தொடங்குவதற்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

அதற்கு முன்னர் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இராணுவத் தாக்குதல்களை நடத்துவதில் அரச படைகள் ஈடுபட்டு வருகின்றன.

கிழக்கில் விடுதலைப் புலிகளின் நிலை மேலோங்கி வருவதாக இராணுவ மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார். எனினும் அந்த நிலையைத் தம்மால் முறியடித்துவிட முடியும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

விடுலைப் புலிகள் இப்போது வடக்கைத் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறார்கள், கிழக்கையும் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காகவே கிழக்கில் தாக்குதல்களை நடத்துகிறார்கள். தமது அந்த நோக்கத்தில் அவர்கள் வெற்றி கண்டு விட்டால், அவர்களது இலட்சியமான தமிழீழத்தை அடைந்து விடுவார்கள்— என்று அந்த மூத்த இராணுவ அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

ஆனையால் கிழக்கை தக்க

**– உதயகாந்தன் –**

வைத்துக் கொள்வதில் இராணுவம் முக்கிய கவனம் செலுத்தப்போகிறது. வான் ஆதிக்கத்தை மீளப் பெற்றுக் கொண்டு அதற்கான தீவிர முயற்சியில் இறங்கும் என்று எதிர்பார்க்கலாம்.

வடக்கில் அரசுக்கோ, இராணுவத்துக்கோ இப் போது கட்டுப்பாடில்லை.

(6 ஆம் பக்கம் பார்க்க)

சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பகம்

### எட்டு வருடங்களுக்கு முன்னர்

# வடமராட்சியில் பெரும் உயிரிழப்பை உண்டாக்கிய "ஒப்பரேசன் லிபரேசன்" அரச படையெடுப்பு!

ஈழப்போரில் இலங்கை அரச படையினர் மேற்கொண்ட நன்கு திட்டமிட்ட பாரிய படைநடவடிக்கையாக "ஒப்பரேஷன் லிபறேசன்" நடவடிக்கையே இன்றும் அரச தரப்பில் வர்ணிக்கப்படுகிறது.

சுமார் ஒன்பதாயிரம் துருப்புக்கள் மூன்று அணிகளாக இந்த நடவடிக்கையில் நேரடியாக ஈடுபடுத்தப்பட்டன.

நீண்டகாலமாக திட்டமிட்டு ஒரு அந்நிய நாட்டின் மீது மேற்கொள்ளப்படுவது போன்று வடமராட்சி பகுதி மீது யுத்தம் தொடுக்கப்பட்டது.

"ஒப்பறேஷன் லிபறேசன்" படை நடவடிக்கையை ஜெனரல் சிறில்ரணதுங்கா பொறுப்பேற்று நடத்தினார்.

முதலாவது அணிக்கு கேணல் விஜயவிமலரட்ணவும் —

இரண்டாவது அணிக்கு பிரிகேடியர் ஜெரி டி சில்வாவும்—

மூன்றாவது அணிக்கு பிரிகேடியர் டென்சில் கொப்பேகடுவவும் — தலைமை வகித்தனர்.

**வானொலி ஒலிபரப்பு**

1987 மே 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை — காலை வானொலியில் அந்த விசேட அலைவரிசையை குடாநாட்டு மக்களில் பலர் செவிமடுத்தனர்.

'யாழ்ப்பாணம் வானொலி' என்று கூறிக் கொண்ட அந்த ஒலிபரப்பில்— "உங்கள் பிரதேசத்தில் ஊரடங்குச்சட்டம் உடனடியாக அமுலாகுகிறது. ஆயினும் பின்வரும் இடங்களுக்குப் போவதற்கு உங்களுக்கு இரண்டு மணிநேர அவகாசம் வழங்கப்படுகிறது" — என்று அறிவிக்கப்பட்டது.

வடமராட்சி உட்பட குடாநாட்டின் பல இடங்களிலும் உள்ள ஆலயங்கள் பாடசாலைகள் பொதுகட்டடங்களின் பெயர்கள் தொடர்ந்து அடிக்கடி அந்த ஒலிபரப்பில் அறிவிக்கப்பட்டன.

அந்தச் செய்தி குடாநாடெங்கும் சில மணிநேரத்துக்குள் பரவுகிறது. எங்கும் பதற்றம்.

அவ்வேளை வான்பரப்பில் திடீரென வந்த ஹெலிக்கொப்டர்கள் அன்றைய காலைப் பொழுதின் அமைதியைக்குலைத்தன.

ஹெலிக்கொப்டர்கள் வழமைபோல் வேட்டுக்களைத் தீர்க்கவில்லை. மாறாக அவற்றில் இருந்து துண்டுப் பிரசுரங்கள் குடாநாடெங்கும் அள்ளி வீசப்பட்டன.

துண்டுப் பிரசுரங்களிலும் அதே அறிவிப்பு. ஆனால் சற்று வித்தியாசமாக....

— "உங்கள் பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் உடனடியாக அமுலுக்கு வருகிறது. மறு அறிவித்தல் [illegible] அமுலில் இருக்கும். [illegible] பான பிரதேசங்களில் [illegible] வீடுகளில் தங்கியிருக்குமாறு கேட்கப்படுகின்றீர்கள். இது உங்கள் சொந்தப் பாதுகாப்பும் பந்தோபஸ்தும் கருதியே."—

இவ்வாறு அந்த துண்டுப் பிரசுரங்கள் மக்களை எச்சரித்தன.



கரும்புலி
கப்டன் மில்லர்

ஒன்றுக்கொன்று முரணான இந்த அறிவிப்புக்களினால் குழம்பிக் கலங்கிய மக்கள் செய்வதறியாது அகப்பட்டதை கையில் எடுத்துக் கொண்டு வெளியேறினர். பெரும்பாலும் ஆலயங்களில் [illegible]

மே 28 ஆம் திகதி காலை [illegible] முகாமில் இருந்து படையினர் வெளியேற முற்பட்டனர்.

பொம்மர்களும், ஹெலிகளும், அவ்ரோ விமானங்களும் வடமராட்சிப் பகுதி எங்கும் விடுதலைப்புலிகளின் நிலைகள் மீது குண்டு மாரி பொழிந்தன.

**29 ஆம் திகதி ஆரம்பம்**

எனினும் மே 29 ஆம் திகதியே "ஒப்பரேஷன் லிபறேசன்" படையெடுப்பு ஆரம்பமானது.

மூன்று கட்டங்களில் இந்தப் படையெடுப்பை நடத்த திட்டமிடப்பட்டது.

முதல் கட்டமாக வடமராட்சி பகுதி நோக்கி படையினர் நகர்த்தப்பட்டனர். வடமராட்சியின் பெரும் பகுதி படையினரால் முற்றுகையிடப்பட்டது.

வலிகாமத்தையும் வடமராட்சியையும் துண்டிக்கும் நோக்கில் கரவெட்டி மண்டான் பகுதியில் முள்ளி என்னும் இடத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் விரைந்து முன்னேறும் துருப்புக்கள் எட்டு ஹெலிக்கொப்டர்களில் தரையிறக்கப்பட்டனர்.

அதேசமயம் கடற்படைக் கப்பல்கள் மூலம் மணற்காடு பகுதியில் துருப்புக்கள் குவிக்கப்பட்டு முன்னேறத் தொடங்கின.

—ஆபத்து சூழ்ந்து விட்டதை உணர்ந்த வடமராட்சி பகுதி மக்கள் பீதியடைந்து வீடுகளைவிட்டு வெளியேறி ஆலயங்களில் திரண்டனர்.

—சகல படை முகாம்களில் இருந்தும் சகட்டு மேனிக்கு ஷெல்கள் ஏவிவிடப்பட்டன.

—வல்வெட்டித்துறை முகாமில் இருந்தும் படையினர் வெளியேறினர்.

நான்கு நாள்களில் குறிப்பிட்ட இலக்குகளை சென்றடைய திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் விடுதலைப் புலிகளின் எதிர்தாக்குதல்கள் மிக மோசமாக இருந்ததாக படை அதிகாரிகளே பின்னர் ஒப்புக்கொண்டனர்.

புலிகளின் கண்ணிவெடிகள்,

**- நல்லூர் தாஸ் -**

மிதிவெடிகளைத் தாண்டி ஆறு நாட்களின் பின்பே படையணிகள் சில இலக்குகளை அடையமுடிந்தது.

**சுடுகாடாக மாறிய வடமராட்சி**

அகப்பட்ட இடங்களில் மக்களை படையினர் கொன்று தீர்த்தனர். வடமராட்சி பகுதி எங்கும் சுடுகாடாக மாறியது

சுமார் 3 ஆயிரம் பொதுமக்கள் கொலையுண்டனர். 15 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட 3 ஆயிரம் இளைஞர்கள் சிறைப்பிடிக்கப்பட்டு பூஸா முகாமுக்கு கப்பலில் கொண்டு செல்லப்பட்டனர். பெண்கள் குழந்தைகள் துன்புறுத்தப்பட்டனர். கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான உடைமைகள் நாசமாக்கப்பட்டன.

பொதுமக்கள் தஞ்சமடைந்திருந்த ஆலயங்கள் பாடசாலைகள் மீது "அவ்ரோ" விமானங்கள் எரிகுண்டுகளை (பீப்பாய்) வீசின.

**மக்கள் கூடிய ஆலயத்தின் மீது தாக்குதல்**

அல்வாய் முத்துமாரி அம்மன் கோவில் மீது மூன்று ஹெலிகள் நடத்திய ஷெல் தாக்குதலில் மட்டும் அங்கு தஞ்சமடைந்திருந்த எழுபத்தைந்து பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

நூறு பேர் வரை படுகாயமடைந்தனர். கண்மூடித்தனமான விமானத் தாக்குதல்களினால் கோவில்கள், பாடசாலைகள் உட்பட முந்நூறுக்கும் மேற்பட்ட கட்டடங்கள் தரைமட்டமாகின.

வடமராட்சி பகுதியை கைப்பற்றும் படையெடுப்பில் பொதுமக்களே படையினரின் தாக்குதல் இலக்குகளாக இருந்தனர்.

ஆயிரக்கணக்கான மக்களின் உயிர்களைப் பலிகொண்டு உடைமைகளை நாசமாக்கி இராணுவ ரீதியில் ஒரு தற்

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் — திருநெல்வேலி
அருள்மிகு
ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்

## பெருந் திருவிழா விஞ்ஞாபனம் 1995

28-05-95 ஞாயிறு கொடியேற்றம் மு. ப 11 மணி
10-06-95 சனி தேர்த்திருவிழா மு. ப. 8 30 மணி
11-06-95 ஞாயிறு தீர்த்தம் மு. ப. 9. 00 மணி

தினமும் இரவு 8.00 மணி முதல் 9. 00 மணி வரை
அகில இலங்கை கம்பன்கழக அமைப்பாளர்
கம்பவாருதி
**திரு. இ. ஜெயராஜ்**
அவர்கள்
**"தருமம் என்றொரு பொருள்"**

என்ற தலைப்பில் இலக்கியப் பேருரைகள் நிகழ்த்துவார். அம்பிகை அடியார்கள் யாவரும் வருகை தந்து தேவியின் இன்னருளை பெற்றுய்யுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

சுபம்

இங்ஙனம்
ஆலய பரிபாலன சபை

(36834)



இணுவில்
ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயில்

## மஞ்சத் திருவிழா ★ விஞ்ஞாபனம் ★

இன்று ஞாயிற்றுக்கிழமை (28-5-95) காலை 8 மணிக்கு எம்பெருமானுக்கு 1008 சங்குகளால் அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று திருவீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும்.
மாலை 5-30 மணிக்கு எம்பெருமானுக்கு பஞ்சமுக அர்ச்சனை இடம்பெற்று இரவு 7 மணியளவில் திருமஞ்சத்தில் வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பார்

இரவு 9 00 மணிக்கு
**ஆறு. திருமுருகன்**
அவர்களின்
**● விநாயக புராணம் ●**
தொடர் சொற்பொழிவு நடைபெறும்
இதனைத் தொடர்ந்து
'கலைச்செம்மல்', 'ஸ்வரராக லயவினோத சுரபி'
**எல். திலகநாயகம் போல்**
அவர்களின்
**★ இன்னிசைக் கச்சேரி ★**
இடம்பெறும்

குறிப்பு! நண்பகல் 12 மணிக்கு அன்னதானம் நடைபெறும்.

இங்ஙனம்
விழா உபயகாரர்

(36835)



31 ஆம் நாள்

## நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு: 10 — 06 — 1907
உதிர்வு: 28 — 04 — 1995

அமரர்
**செல்லப்பா திருநாவுக்கரசு**
[ஓய்வு பெற்ற தபால் தந்தி தொலைத்தொடர்பு பொறியிலாளர்]

எங்கள் நெஞ்சங்களில் என்றும் அணையா ஒளி வீசும் தங்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாருக்கு நேரில் வந்து அஞ்சலி செலுத்தியோருக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் பல்வேறு வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

பண்ணாகம்,
சுழிபுரம்.

[36831]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 28-05-1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

### "ராக்கிங்"...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யாழ் பல்கலைக் கழகத்திற்கு புதிதாக அனுமதி பெற்றுள்ள மாணவர்களுக்கு 'கெத்' ஆங்கில வகுப்புகள் முடிவடைந்து அவர்கள் வெளியேறும் வேளையில் மிக மோசமான முறையில் "ராகிங்" மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குறிப்பாக மாணவிகள் மிகவும் அநாகரிகமான 'ராகிங்' சேட்டைக்கு ஆளாக்கப்படுகின்றனர்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் இவ்வாறு மேற்கொள்ளப்படும் "ராகிங்" சேட்டைகள் குறித்து தக்க ஆதாரத்துடன் தெரிவிக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட மாணவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ந-4)

### 2 தேசத் துரோகிகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போராளிகளின் நடமாட்டங்களை அவ்வப் போது இராணுவத்தினருக்கும் மாற்று இயக்கங்களுக்கும் இவர் காட்டிக் கொடுத்து வந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த புதன்கிழமை அன்று கிரானிற்கும் சந்திவெளிக்கும் இடையில் வைத்து மின்கம்பத்தில் கட்டி விடுதலைப்புலிகள் இத் தேசத்துரோகிக்கு மரண தண்டனையை நிறைவேற்றினர்.

கடந்த செவ்வாய் அன்று வாழைச்சேனையில் குகதாசன் என்ற ரெலோ தேசத்துரோகிக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

வாழைச்சேனை பிரதேச ரெலோ பொறுப்பாளராக இருந்த இவர் அங்குள்ள தமிழ் மக்களுக்கு பல இன்னல்களைப் புரிந்து வந்துள்ளார்.

இராணுவத்தினருடன் இணைந்து போராளிகள் மற்றும் போராளிகளின் ஆதரவாளர்களின் நடமாட்டங்களை அவதானித்து அவர்கள் மீதான பதுங்கித் தாக்குதலில் ஈடுபட்ட இந்நபர் சம்பவ தினத்தன்றும் போராளிகள் மீது பதுங்கித் தாக்குதல் ஒன்றை நடத்தியிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. [இ-4]

### தமிழ் மக்களின் அபிலாசை...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இங்கு வாழும் மக்கள் மீதும் கட்டுப்பாடில்லை. இங்கு விடுதலைப் புலிகளின் அரசாங்கமே நடக்கிறது. இவற்றைப் பலரும் ஒப்புக் கொள்கிறார்கள்.

இந்த உண்மையை இராணுவத்தின் மூத்த அதிகாரிகளும் உணர்ந்துள்ளனர். அது அவர்களுக்கு ஏற்பட்ட பெரும் பின்னடைவாகும். அதனாலேயே "இந்த போரில் வெல்ல வேண்டுமானால் மக்கள் மீது அரசுக்கும் இராணுவத்துக்கும் கட்டுப்பாடு இருக்க வேண்டும்" என்று இராணுவ அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார்!

**வடமராட்சி நோக்கி**

கிழக்கிலும் வடக்கைப் போல மக்கள் மீதான கட்டுப்பாட்டை இழந்துவிடக் கூடாது என்பதில், அதனைப் பேண வேண்டும் என்பதில் அரசினரும், இராணுவத்தினரும் அதிக அக்கறை காட்டுகிறார்கள்.

வடக்கிலும் தமது பிரதான தளமான — தரை, கடல் வான் வழங்கு நிலையுடைய தளமான — பலாலியைக் காப்பாற்ற வேண்டும் என்பதில் படையினர் கவனமாக உள்ளனர்.

விடுதலைப் புலிகளின் கடற்படைப்பலத்தை நசுக்கிவிட வேண்டும் என்ற இலக்குடனேயே வடமராட்சியை நோக்கி நகரும் இராணுவ நடவடிக்கைகளை (ஒப்பரேசன்களை) நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளனர்.

குறிப்பாக வல்வெட்டித்துறை, பருத்தித்துறைப் பகுதிகளைப் பிடித்துவிட்டால் விடுதலைப்புலிகளின் கடற்படைப் பலத்தைக் குறைத்து விடலாம் என்றும் —

விமானங்கள் கடல் வழியாக வந்து பலாலியில் இறங்கிச் செல்ல வாய்ப்பாக இருக்கும் என்றும் — பாதுகாப்பு வட்டாரங்கள் கருதுகின்றன.

அதனாலேயே பலாலியில் இருந்து தொண்டமானாறின் ஊடாக வல்வெட்டித்துறை, பருத்தித்துறைக்கு நகர்வதற்கான திட்டத்தை இராணுவம் வகுத்துள்ளது.

அந்தத் திட்டத்தின் முதல் அங்கம் தான், கடந்த வாரம் வயாவிளான் பக்கத்திலிருந்து தொண்டமானாறுப் பகுதிக்கு முன்னேற முயன்ற 'ஒப்பரேசன் சேவ் பசேஜ்' நடவடிக்கை என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எட்டு வருடங்களுக்கு முன்னரும், 1987 ஆம் ஆண்டு மே மாத இறுதி வாரத்தில் லலித் அத்துலத் முதலி தேசிய பந்தோபஸ் அமைச்சராக இருந்த காலத்தில், வடமராட்சியைப் பிடிப்பதற்காக "ஒப்பரேசன் லிபரேசன்" நடத்தப்பட்டது நினைவில் கொள்ளத்தக்கது.

முதலாவது கரும்புலி கப்டன் மில்லர் நடத்திய தாக்குதலோடு அந்த 'ஒப்பரேசன் லிபரேசன்' கரைந்து போனது.

அதனை சந்திரிகா மறந்து போனாலும் இராணுவம் மறக்கமாட்டாது! ★

### ராவ்வின் காங்கிரஸின்....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தரை மட்டமாக்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து வட இந்திய நகரங்களில் மூண்ட இனக்கலவரங்களில் 2000 இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களில் அநேகமானோர் முஸ்லிம்கள்.

தற்போது நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரஸுக்கு முஸ்லிம்களின் வாக்குகளை இழக்கச் செய்யும் மற்றொரு சம்பவம் காஷ்மீரில் இடம் பெற்றுள்ளது

15 ஆம் நூற்றாண்டு கால பழைமை வாய்ந்த ஷரார்—இ ஷரீப் பள்ளிவாசல், முஸ்லிம் தீவிரவாதிகளுக்கும் இந்தியப் படையினருக்கும் இடையிலான மோதலில் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இந்திரா காந்தியின் காலத்திலும் ராஜீவ் காந்தியின் காலத்திலும் பஞ்சாப்பின் அமிர்தசரஸில் உள்ள சீக்கியர்களின் பொற்கோயிலிலும் இந்த போன்ற பிரச்சினைகள் இருந்து வந்தன.

ஆனால் பொற்கோயிலுக்கு குறிப்பிட்ட அளவு சேதம் எதுவும் ஏற்படாத விதத்தில் அப்போது பிரச்சினை கையாளப்பட்டது.

**தடா சட்டம்**

இந்தியாவில் உள்ள சிறுபான்மையினரை முக்கியமாக முஸ்லிம்களைப் பாதித்த மற்றும் ஒன்று தடா (Terrorist and disruptive Activities (Preventive Act) சட்டம் ஆகும்.

பஞ்சாப்பின் சீக்கிய தீவிரவாதிகளின் வன்முறைகள் அதிகரித்த போது 1985 ஆம் ஆண்டு இந்தச் சட்டம் ராஜீவ் காந்தியினால் முதன் முதலில் கொண்டுவரப்பட்டது

1989 இல் காஷ்மீரின் முஸ்லிம் பிரிவினைவாதிகளின் போராட்டம் வலுப்பெற்ற போது தடாச் சட்டம் மேலும் கடுமையாக்கப்பட்டது

இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை காலாவதியாகும் விதத்தில் இச்சட்டம் செயற்படுத்தப்பட்டு வந்தது.

கடந்த 23 ஆம் திகதி அது காலாவதியான போது இதனை நீடிக்காமல் அப்படியே செயலிழக்க விடப்பட்டுள்ளது.

தடாச் சட்டத்தின் கீழ் இந்தியா முழுவதும் இன்றும் 51 ஆயிரம் பேர் வழக்குகளை எதிர் நோக்கி இருக்கிறனர்.

தடாச் சட்டத்துக்குப் பதிலாக புதிய ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதற்கு நரசிம்மராவ் அரசு நடவடிக்கை எடுத்தது. ஆனால் கட்சிக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாக புதிய சட்டம் கொண்டு வருவது பின் போடப்பட்டுள்ளது.

தடா சட்டத்தை முஸ்லிம்களே பெரும்பாலும் எதிர்த்தனர். இந்தச் சட்டத்தை நீக்கியது மூலம் 1996 ஜூன் தேர்தலில் முஸ்லிம்களின் ஆதரவை நரசிம்மராவ் பெற்று விடுவார் என்று கருதி விட முடியாது. ராவ் அரசு முஸ்லிம்களுக்கு செய்த உதவிகளைவிட அநீதிகளே அதிகம்.

பாரம்பரியமாக காங்கிரஸுக்கு கிடைத்து வந்த முஸ்லிம்களின் வாக்குகள் இம்முறை நிச்சயமாக நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரஸுக்கோ அல்லது இந்து தேசிய வாதக் கட்சியனா பாரதீய ஜனதாவுக்கோ கிடைக்கமாட்டாது

ஆனால் முஸ்லிம்களின் வாக்குகளை மட்டும் நம்பி இருந்து போட்டிக் காங்கிரஸ் வெற்றி பெற்று விடவும் முடியாது

இந்திய அரசியலில் கட்சிகள் உடைந்து போவதும், உடைந்த கட்சிகள் மீண்டும் மீண்டும் உடைந்து போவதும் சர்வ சாதாரணம்

திவாரி — அர்ஜுன் சிங் தலைமையிலான போட்டிக் காங்கிரஸ் உருவாகி மூன்று தினங்களுக்குள்ளேயே கருத்து முரண்பாடுகள் தலைகாட்டி உள்ளன

சோனியா காந்தியின் முழு ஆதரவைப் பெறுவதுடன் கூட்டுச் சேர்ப்புடன் செயற்பட்டால் [illegible] காங்கிரஸும் [illegible] வரமுடியும். ★

### சாரணர் குழுவின் மந்திரவித்தை காட்சி

யாழ்ப்பாணம், மே 28
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சாரணர் குழுவினரின் மந்திரவித்தைக் காட்சி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (இ)

### வில்பத்து...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

இவ்வாறு சிங்களக் குடும்பங்கள் வெளியேறுவதை தடுக்க அரசு அவசர நடவடிக்கைகளை எடுத்து வருகிறது (ஜ 4)

### பாதுகாப்பு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அதனை அடுத்து 825 பிரேதப் பெட்டிகளை தமக்கு அனுப்பி வைக்குமாறு காலஞ்சென்ற தோர் விரக்தியுடன் தெரிவித்திருந்தார்.

அவரது பாதுகாப்புக்கு நியமிக்கப்பட்டிருந்த 10 பொலிஸாரும் விசேட இராணுவ பயிற்சி பெற்றவர்கள் என்று கூறப்படுவது தவறாகும். அவர்கள் சாதாரண ரிசேர்வ் பொலிஸ்காரர்களே. அவர்களில் ஒரு சார்ஜன்ட் கூட இல்லை

— இவ்வாறு சந்திரா லக்கார தோர் மேலும் தெரிவித்தார். [ஐ-6]

### வடமராட்சியில்....

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலிக வெற்றியை படையினர் அடைந்துவிட்டனர் எனக் கருதப்பட்டது

ஆனால் படையெடுப்பின் 10 ஆவது நாள் இந்தியா நேரடியாக இலங்கையில் தலையிட்டது.

**வந்தது இந்தியா**

தமிழர்களின் நேசசக்தியாகத் தன்னை வெளிக்காட்டி வந்த இந்தியா ஈழப்போராட்டத்தில் தன் கபடநாடகத்தை அரங்கேற்றுவதற்கு "ஒப்பரேஷன் லிபரேசன்" படையெடுப்பு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது.

இந்தியா தனது ஐந்து போக்குவரத்துவிமானங்களை அத்து மீறி அனுப்பி குடாநாட்டின்மீது உணவுப்பொருள்களை "பரசூட்" மூலம்போட்டது.

**கரும்புலித் தாக்குதல்**

"விடுதலைப்புலிகளின்குகை என வர்ணிக்கப்பட்ட வடமராட்சி பிரதேசத்தை கைப்பற்றியதன்மூலம் புலிகளின்மனோதிடத்தை தளரச் செய்து விட்டோம்" என்று ஸ்ரீலங்கா அரசும், படைகளும் தம்பட்டம் அடித்துக் கொண்டிருந்த வேளை —

உலகமே எதிர்பார்த்திராத நேரத்தில் —

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த பெரிய இராணுவ முகாம் விடுதலைப் புலிகளின் கரும்புலித் தாக்குதலால் தகர்க்கப்பட்டது

ஈழ விடுதலைப் போரின் முதலாவது கரும்புலித்தாக்குதலை நடத்தி 'வரலாற்றில் தன் முத்திரையை பதித்தார் கப்டன் மில்லர்!

இத்தாக்குதல் அரச உயர்பீடத்தை அதிர்ச்சி அடைய வைத்தது ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவை இந்தியாவிடம் சரணடைய வைத்தது - என்றே சொல்லலாம்.

"ஒப்பரேசன் லிபரேசனின்" இரண்டாவது கட்டமாக வலிகாமம் பகுதி மீது மேற்கொள்ளப்பட இருந்த படை நகர்த்தல் இத் தாக்குதலால் பிசுபிசுத்துப் போனது.

பின்னர் இந்திய — இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தானது. அமைதிப்படை என்ற பெயரில் சுமார் ஒரு லட்சம் இந்தியப்படைகள் தமிழீழப் பகுதிகளில் தரையிறங்கின.

— தொடர்ந்து வந்த சுமார் மூன்று மாத கால அமைதியின் பின் "ஒப்பரேஷன் லிபரேசன்" என்ற இராணுவ நடவடிக்கையை இந்தியப் படைகள் "ஒப்பரேசன் பவான்" என்ற பெயரில் குடாநாட்டில் ஆரம்பித்தன. ஸ்ரீலங்கா படையினரின் கையில் இருந்த யுத்தம் இந்தியப் படையினரின் கைகளுக்கு மாற்றப்பட்டது. ★

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி - கிழக்கு உதைபந்தாட்டச் சங்கம் இணைந்துள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3. 00 மணி:- கலைவாணி எதிர் கவி
★ 4. 00 மணி:- சென் நிக்கிலஸ் எதிர் சென். மைக்கல்
★ 5. 00 மணி:- பல்கலைக் கழகம் எதிர் சென். அன்ரனிஸ்

★ ★ ★

"உதயன்" கிண்ணத்திற்காக பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் ஏழு பேர் கொண்ட அணிகளுக்கு இடையில் பருத்தித்துறை நீக முனையில் உள்ள கழக மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3. 45. மணி:- உதயதாரகை 'ஏ' அணி எதிர் கலட்டி ஐ. வி. க அணி
★ 4. 45. மணி:- ஞானம்ஸ் 'ஏ' அணி எதிர் அல்வாய் நண்பர்கள் 'ஏ' அணி

★ ★ ★

ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம், ஈ. எஸ். பேரம்பலம் சக நிறுவனத்தின் ஆதரவுடன் நடத்தி வந்த — ஜொலி ஸ்ரார்ஸ் கிண்ணத்துக்கான — மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று காலை 9 30 மணி முதல் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் யாழ். ஜொனியன்ஸ் அணியை எதிர்த்து கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழக அணி மோதும்.

பிரதம விருந்தினராக யாழ் இந்துக் கல்லூரி அதிபர் திரு அ. பஞ்சலிங்கம் கலந்து கொள்வார்.

### தீர்வை ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வெளியிட்டுள்ளது.

தற்போது ஓரளவு யுத்த உதவிகளை இலங்கைக்கு வழங்க முஸ்லிம் நாடுகள் மாத்திரம் முன்வந்துள்ளன.

இலங்கையில் உருவாகியுள்ள இனப்பிரச்சினையின் தாக்கத்திலும் பார்க்க அந்த நாடுகள் முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக் குறித்தே அதிக கவனத்தைச் செலுத்தி வருவதை கவதானிக்க முடிகிறது என அப்பத்திரிகை தெரிவிக்கிறது.

இலங்கையில் இனப்பிரச்சினை தோன்றுவதற்கு மூல காரணம் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் என்றும்—

தமிழ் மக்களுக்கு குறிப்பாக 1956, 1965, 1987 ஆம் ஆண்டுகளில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்றும் —

இப் பிரச்சினைக்கு இலங்கை அரசு முன்வைக்கும் தீர்வினை தாங்கள் பார்வையிட்ட பின்னரே இராணுவ உதவிகள் வழங்குவது தொடர்பாக தங்களால் சிந்திக்க முடியுமெனவும் முக்கிய அயல் நாடு ஒன்று தெரிவித்துள்ளதாக யுத்திய தெரிவிக்கிறது.

ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வொன்றினை முன்வைக்குமாறு ஐரோப்பிய சமூகத்தைச் சேர்ந்த நாடுகளும், அமெரிக்காவும் அரசுக்குத் தெரிவித்துள்ளன என்று அறியவருகிறது. (க-10)

### ஆயுதங்களை ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

★ கதற்குரிய றவைக்கூடு — 1
★ 5.56 றவைகள் - 29
என்பன விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. [இ 4]

### சமரச ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களுக்கும் அரசுக்கும் இடையே சமரசத்தை ஏற்படுத்த முயற்சி பார் என்று கொழும்பில் உள்ள கனடா தூதரகம் நேற்று அறிவித்துள்ளது.

திரு. றேமன்ட் சான்ட்ஸ் கொழும்பில் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், அரசியல் கட்சித் தலைவர்கள், தொழிலதிபர்கள் மற்றும் பிரமுகர்களையும் சந்திப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6)


## தவறிவிட்டது

முத்து மணவறையில் பொருத்தப்படும் இரண்டு பாவைகளும், ஒரு லக்ஸ்மியும் நீர்வேலிக்கும் உரும்பிராய்க்குமிடையில் [இராச வீதி, மானிப்பாய் வீதி] நேற்று [27-05-95 சனி] தொலைந்து விட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**அ. அன்னலிங்கம்**
அம்மன் கோயிலடி
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

[36838]



## மரண அறிவித்தல்கள்

### செல்வி பானுஜா நாகேந்திரராஜா

திருநெல்வேலி மேற்கு பத்திரகாளி கோவிலடியை சேர்ந்த செல்வி பானுஜா நாகேந்திரராஜா நேற்றுக் காலமாகிவிட்டார்.

அன்னார் க. நாகேந்திரராஜா - கலாமதி தம்பதிகளின் அருமைப் புதல்வியும், ச. கந்தசாமி - சற்குணவதி (கனடா) தம்பதிகளினதும், காலஞ்சென்ற நா. சிவகுரு, சரோஜினிதேவி தம்பதிகளினதும் அன்புப் பேர்த்தியும், ரவீந்திரன் (கனடா), ரவிசங்கர் (சுவிஸ்), சாம்பசிவம் [டோகா], இந்துமதி, தங்கராசா, ஜெயமதி, கயலேந்திரன், காந்திமதி, ஸ்ரீமதி ஆகியோரின் பெறாமகளும், துரைசிங்கம், கோமேஸ்வரி, இரகுநாதன், இரத்தினேஸ்வரி பாலநடராஜா [கனடா], மகேஸ்வரி [கனடா], குபேந்திரராஜா [நோர்வே], நந்தினி [நோர்வே] மதிவண்ணன் (டோகா), டக்சினி, மதிச்சுதின் [சுவிஸ்] மதிக்குமார் [டோகா] ஆகியோரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
இ. துரைசிங்கம்
(மாமா)

அம்மன்வீதி,
திருநெல்வேலி மேற்கு

[36837]

### கந்தர் பிள்ளையார்

நவாலி தெற்கை சேர்ந்த கந்தர் பிள்ளையார் காலமானார் இவர் நாகபூரணத்தின் (சரசு) அன்புக் கணவரும் நகுலேந்திரம், திருச்செல்வம், சண்முகநாதன், துரைசிங்கம் ஆகியோரின் தகப்பனாரும் முத்துலிங்கம், தங்கரத்தினம் லீலாவதி, சீதா ஆகியோரின் மாமனாரும் தருமலிங்கம் (கந்தசாமி) சிறியதகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 28-5-95 இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11 மணியளவில் கொத்துக்கட்டி மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
சி. துரைசிங்கம்
(மகன்)

(36836)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org